# சந்நிதி முருகனின் ஆட்டக்காவடி

**திரு சி கிருஸ்ணபிள்ளை J.P அவர்கள்**

காவடி ஆட்டம் தமிழ் மக்களின் பாரம்பரியக் கலைகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் இந்தக் காவடி ஆட்டம் அல்லது ஆட்டக்காவடி இன்று பாடசாலைகளிலும் மற்றும் கலாச்சார விழாக்களிலும் முக்கிய இடத்தை வகிக்கும் ஒரு கலை நிகழ்வாக இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பண்டு தொட்டுச் சைவப் பெருமக்களால் இறையருள் பெற வேண்டுதல் செய்யுமுகமாக நேர்த்தி வைத்துப் பல விதமான முறைகளில் காவடிகள் எடுத்து நேர்த்திக்கடன் நிறைவு செய்து வழிபாடு செய்யும் வழமையை முருகன் ஆலயங்களிற் காணலாம். இந்த வகையில் கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் ஆகிய மௌனபூசை வழிபாடு நடைபெறும் முருகன் ஆலயங்கள் பிரசித்தி பெற்று விளங்கினாலும் சந்நிதி முருகன் ஆலயத்தில் காவடிகள் எடுத்து இறையருள் வேண்டுவதை மிகக் கூடுதலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆயிரத்தெட்டு வேல்கள், முள்ளுகளைக் கைகள், நெஞ்சு, முதுகு ஆகிய அவயங்களிற் பாய்ச்சி எடுக்கும் செதிற் காவடிகள், கனரக முள்வளைவுகள் பின்னங்காலகளிலும் முதுகிலும் பாய்ச்சி, பறவைபோல் தொங்கிய நிலையில் உழவு இயந்திரத்தில் பவனிவரும் துலாக்காவடி, தூக்குக்காவடி, பறவைக்காவடி, மற்றும் பாற்காவடி, செம்புக்காவடி, கரகக் காவடி எனப் பல முறைகளில் தங்கள் உடலை வருத்திக் காவடி எடுத்து முருகன் அருள் ஆசிபெறும் கைங்கரியம் சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று நிகழ்ந்து வருகின்றது இதன் காரணமாகச் சந்நிதி முருகனுக்கு காவடிக்கந்தன் என்னும் நாமமும் நிலைத்திருக்கின்றது.

பாரம்பரியக் கலைகள் வரிசையிலான ஆட்டக்காவடி அல்லது காவடி ஆட்டத்தை மெருகூட்டி வளர்த்த பெருமைக்குரிய சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று அத்தகைய காவடி ஆட்டத்தை காணமுடியாததாகி விட்டது.

1960களின் பிற்பகுதிவரை இத்தகைய ஆட்டக்காவடி எடுக்கும் நிகழ்வு சந்நிதி முருகன் ஆலயத்தில் தேர், தீர்த்த உற்சவ நாட்களில் முக்கிய நிகழ்வாக இடம்பெற்று வந்துள்ளது. இந்த ஆட்டக்காவடிகள் சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து பல மைல்கள் தூரத்தில் உள்ள கிராமங்களில் இருந்தே வந்துசேரும் இத்தகைய கிராமங்களில் ஆவரங்கால், பலாலி, கைதடி, மட்டுவில், நுணாவில் ஆகிய கிராமங்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன.

ஆவரங்கால் கிராமத்தில் ஆட்டக்காவடிக்குப் பயிற்சி அளிக்கும் அண்ணாவி பரம்பரை ஒன்றுகூட இருந்தது.

சந்நிதி முருகனின் கொடியேற்ற உற்சவத்தை அடுத்து வரும் நாட்களில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நாலுபேர் அல்லது ஆறுபேர் கொண்ட குழுக்களாக இணைத்து அண்ணாவியாரிடம் ஒப்படைத்துக் காவடி ஆட்டப் பயிற்சி பெற வைப்பார்கள். தேர் அல்லது தீர்த்த உற்சவத்தன்று தங்கள் கிராமத்திலுள்ள ஆலயம் ஒன்றில் இருந்து காலை எட்டு மணியளவில் காவடி எடுக்கும் நிகழ்வு ஆரம்பமாகி மாலை நாலு ஐந்து மணியளவில் நடைபவனியில் சந்நிதி முருகன் ஆலயத்தை வந்து சேரும்.

காவடி ஆட்ட நிகழ்வுக்கு பக்க வாத்தியகாரர்களாகவும், அணிசெய் கலைஞர்களாகவும் அந்நாட்களில் பிரபல்யம் வாய்ந்த ஆர்மோனிய வித்துவான்களும் மிருதங்க வித்துவான்களும் பிற்பாட்டு பக்கப்பாட்டுத் தாரர்களாக பிரபல சங்கீத வித்துவான்களும் பங்களிப்பு செய்து கொண்டிருப்பார்கள்.

அந்தக் காலத்தில் 'கூத்து' என அழைக்கப்படும் கொட்டகை போட்டு நடிக்கப்படும் இசை நாடகங்களில் பங்களிப்பு வழங்கும் புகழ்பெற்ற கலைஞர்களான இவர்களைப் பார்ப்பதற்கும் இசையைக் கேட்பதற்கும் இரசிப்பதற்குமாகப் பெருங்கூட்டம் வீதியில் திரண்டிருக்கும்.

தங்கள் கிராம்களில் இருந்து பிரதான வீதிகள் ஊடாக பல மைல்கள் தாண்டி நடைபவனியாக முருகபஜனையுடன் வரும் காவடிக் கோஷ்டிகள் இடையில் முக்கிய பல இடங்களில் தரித்து நின்று ஆட்டம் வைத்துக்கொண்டே செல்வார்கள். வீதிகளில் அடியார்கள் கூட்டம் சுற்றிவரக் கூடிநின்று ஆட்டத்தைப் பார்த்து மகிழும் காட்சி மிக ரம்மியமாக இருக்கும்.

காவடி ஆட்டப்பாடல்கள் பெரும்பாலும் சந்நிதி முருகன் அருள் பொதிந்தவையாகவே இருக்கும்.

1. கடற்கரையூர் மேவும் கதிர்வேலா – எம்மைக்
   காத்து ரட்சிப்பாயே அனுகூலா

2. பக்தர்கள் உன் சந்நிதியேதேடி – அப்பன்
   பஜனை பாடுவார் பலகோடி

இவ்வாறாக மனதை உருக்கும்.

இவ்வாறாக மனதை உருக்கும் பாடல்கள் ஆட்டத்தின்போது அண்ணாவியாராலும் பக்கப்பாட்டுக்காரர்களாலும் இசைக்கப்படும்.

தேர், தீர்த்த உற்சவ நாட்களில் சந்நிதி முருகன் ஆலயத்தைச் சுற்றி நான்கு வீதிகளிலும் இத்தகைய காவடிக் குழுக்கள் காவடி ஆடுவதும், அடியார்கள் கூட்டம் சூழ நின்று பார்த்து ரசிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும்.

இவ்வாறு தங்கள் குழந்தைப் பருவத்தில் இருந்து பத்து வருடங்கள் தொடர்ந்து காவடி ஆட்டத்தை முறையாக அண்ணாவியாரிடம் பயின்று தங்கள் கிராமத்தில் இருந்து ஆட்டக்காவடி எடுத்துக் காவடி ஆடிக் கடமையை நிறைவேற்றி முருகன் அருளாசி பெற்றவர்கள் சிலர் இன்று முதியவர்களாகி அரச ஒய்வூதியர்களாக வளமுடன் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அண்ணாவியாரிடம் முறையாகப் பயின்று நிறைவேற்றப்பட்ட ஆட்டக்காவடி இன்று முற்றாகவே சந்நிதி முருகன் ஆலயத்தில் மறைந்துவிட்ட ஒரு கலை நிகழ்வாகிவிட்டது. இதற்கு அண்ணாவியார் பரம்பரை இன்று இல்லாததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

மற்றொரு முறைக்காவடியான ஆயிரத்தெட்டு வேல்கள், முள்ளுகள் பாய்ச்சி நிறைவேற்றப்படும் செதிற் காவடியும் இன்று குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துவிட்டது.

செதிற்காவடி, ஆட்டக்காவடி எல்லாவற்றின் இடத்தை இன்று துலாக்காவடி, தூக்குக்காவடி, பறவைக்காவடி வகிக்கின்றன என்று கூறலாம்.

இந்தத் தூக்குக் காவடி, துலாக் காவடி ஐந்து ஆறு மைல்கள் தூரத்திலுள்ள கிராமங்களில் இருந்தே வந்து சேருகின்றன இந்தக் காவடி முதன் முதலாக 1950ஆம் ஆண்டு தேர் உற்சவத்தன்று அடியார் ஒருவரால் நிறைவேற்றப்பட்டது. பார்ப்பதற்கு மிகப் பயங்கரமாக இருந்த இக்காவடி நிகழ்வு இன்று மிகப்பிரபல்யமானதாகும் எவரும் மிகச் சுலபமாக நிறைவேற்றக் கூடிய காவடி நிகழ்வாகவும் அமைந்துவிட்டது.

சந்நிதி முருகனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட தூக்குக் காவடிகள், துலாக் காவடிகள் அயற்கிராமங்களில் இருந்து வந்து சேர்வதைக் காணலாம்.

ஆட்டக்காவடி முருகபக்தியைக் கிராமங்கள் தோறும் ஊற்றெடுக்கச் செய்யும் ஒரு நிகழ்வு எனக்கூறலாம் பக்தியை இசையுடன் இணைத்து உடல் லாவண்யப்படுத்தும் இவ்ஆட்டக் காவடியை ஆடுவோர் மட்டுமன்றி பக்தி இசை வழங்குவோர் மட்டுமன்றி அதைப்பார்த்து இரசிப்போரும் முருகனின் பக்தியில் ஊறித் திளைத்து ஆனந்தப்பரவசமடைவதைக் காணலாம்.

இத்தகைய முருக இறையின்பம் தரும் ஆட்டக்காவடியைத் துார்ந்து போகாமற் பேணிப் பாதுாப்பது முருகபக்தர்களின் கடமை மட்டுமன்றி தமிழர் பாரம்பரிய கலைகளைக் கட்டிக்காக்கும் பொறுப்புமிக்க ஒவ்வொரு இந்துவினதும் கடமை மட்டுமன்றி தமிழர் சமுதாயத்தினதும் ஒன்றிணைந்த கடமையுமாகும்.

**அகிலத்து ஞானமறை**

நூறாவது “ஞானச்சுடராய்” சித்திரை வியவருடம் ஏற்றிட்ட
ஆறாத்துயர்களை ஆறுமுகன் சந்நிதிச்சுடராய்
நூறாயிரம் கல்விக்கலை மான்களும் கவிவாணரும் ஏற்றிட்ட
ஆறாறுதத்துவம் பேசிடும் வித்துவப்புலவர்கள் கூடிட்ட
நூாண்மதியாளருடன் நூான்பொருள் பெருக்கியதனம்
ஆறாய் விருந்தமுதாய் சொரிந்திட்ட ஆச்சிரமமண்டப
நூதன ஞானவிழாச் சுடர் அகிலத்து ஒலிஒளியாய்
ஆலித்துவருமறை மலர்ந்துமணம் பரப்பியோர் வாழிவாழி

# விநாயகரை வழிபட்டு
# மனக்கவலையினை மாற்றுவோம்

**திரு க. சிவசங்கரநாதன் J.P அவர்கள்**

இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு வரும் உயர்ச்சியினை விரும்புகின்றனர். உயர்ச்சியும் அவரவர் முயற்சியளவாகவே அமையும் நீர் அளவாக நிரம்பல் நீளுவது போல உள்ளத்தின் ஊக்கத்தின் அளவாக ஓங்கும்.

"வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத் தனைய(து) உயர்வு"

என்பது வள்ளுவர் வாக்கு.

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பது முதுமொழி. ஆனால் ஊக்கமுடன் உழைப்போரையும் உயரவிடாது உலைவிக்கின்றன. வந்தடையும் விக்கினங்கள் விக்கினங்களும் வெள்ளம் போல வேகமாகவரும்.

"வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக்கெடும்"

என்பது வள்ளுவரின் மற்றொரு வாக்காகும்.

துன்ப வெள்ளம் நீங்கத் தும்பிக்கையான் பாதத்தை நம்பி உள்ளத்தினால் துதிக்கவேண்டும். நித்தமும் எம்பெருமான் திருவடியைத் தியானிக்கவேண்டும். வியட்டிப் பிரணவமாகிய உமை பெண்யானையாகவும் சமட்டிப் பிரணவமாகிய தாம் ஆண் யானையாகவும் வடிவுகொண்டு வழிபடுபவர்களுடைய இடர்களைக் கடிகின்ற கணபதி வர அருள்செய்து அவரையே பூதகணங்களின் தலைவராக நியமனஞ் செய்து விக்கினேஸ்வரர் எனப்பெயருஞ் சூட்டினார் பரம்பொருளார்.

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனது தான் முடியுறப் பணிவரேல்
அன்னர்தந் சிந்தைபோல் ஆக்குதி அலது உனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதிநீ"

என்று கந்தபுராணம் காட்டும் உபவிதியைச் சான்றாக காணலாம்.

விக்கினேஸ்வரர் விக்கினங்களை நீக்குபவரே, வியட்டி, சமட்டிப் பிரணவங்களின் வரிவடிவயானைகளின் வைத்துக் காட்டியிருக்கிறார் கச்சியப்பசிவாசாரியார் வியட்டிப் பிரணவம் உகார மகார அகாரமாய் உமையைக் குறிக்கும் சமட்டிப் பிரணவம் அகார உகார மகாரமாய்ச் சிவனைக் குறிக்கும் என்பது அக்கினி புராணம் ஆதியாகியே ஓங்கிய தனி எழுத்து ஒன்று இரண்டதாய்த் தாங்கிய கைம்மாலை போலத் தோன்றும் என்றும் மூலமாயுள்ள தோர் மன்பெருந் தொல் பொறி ஈருருவுறீஇ ஆனைபோலப் பொருந்தும் எனவும் கூறுகிறது கந்தபுராணம். ஆனைபோல் அணுகும் எனவே இரு பிரணவங்களும் சேர இருமையின் ஒருமையாய் உதித்தனர். ஓம்கார மூர்த்தியாகிய விக்கினேஸ்வரர் எனவே விக்கினேஸ்வரர் சிவனின் வேறல்லர் என்பது வெள்ளிடைமலை.

இதனைக் கந்தபுராணம் பின்வருமாறு கூறுகின்றது

“காப்பவன் அருளும் மேலோன் கண்ணகன் ஞாலம்யாவும்
தீப்பவன் ஏனைச்செய்கை செய்திடும் அவனும் நீயே
ஒப்பிடும் செய்கை என்னளமதுளம் வெதுப்பும் இன்னல்
நீப்பது கருதி என்றோ நீயருள் வடிவங் கொண்டாய்”

இவ்வுண்மையைத் திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரம் தெளிவு படுத்துகின்றது.

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

திருச்சிற்றம்பலம்

சிவன்கோயில்களில் சரி அம்பாள் ஆலயங்களில் சரி விஷ்ணு ஆலயங்களிலும் சரி விநாயகர்க்கு முதற்பூசை நிகழ்த்தப்படுகிறது. எனவே விக்கினேஸ்வரப்பெருமான் வேண்டி விக்கினங்களினின்றும் விடுபடுவோமாக.

**ஆற்றங்கரை அழகனை நிதம் போற்றுகின்றோம்.**

சந்நிதி முருகனைத் தரிசனம் செய்தால்
சங்கடங்கள் எமைப் பங்கம் செய்யாதென
சந்நிதி சென்று வேலனைத் தொழுதே
சாந்தி பெற்ற நன் மனத்துடனே
ஆச்சிரமந்தனில் நல்ல அறிவுக்கு உணவு
ஆன்றோர் பலருடன் பகுத்துண்டு
செவிக்குணவும் சிறந்த வயிற்றுணவும்
சிறப்பாகக் கிடைத்த நன் நிறைவால்
ஆற்றங்கரையானின் அற்புதமான
அழகிய தெய்வீக நற்சூழலிலே
அண்டினோர்க்கு அபயமளித்திடும்
அழகன் முருகனை நிதம் போற்றுவமே.

- நீர்வை மயூரகிரிசர்மா

# இசையினால் இறைவனை அடையமுடியும்

**திரு இ. சாந்தகுமார் அவர்கள்**

ஆடவரைப் பார்ப்பதிலை என விரதம் பூண்ட ‘சுரமஞ்சரி’ என்னும் நங்கையை சீவகன் வயது முதிர்ந்த அந்தணர் வேடத்தில் சென்று இசைபாடி தன்வயப்படுத்தினான். சீவகனின் இசைகேட்டு அவ்விடத்திற்கு வந்த மகளிரின் வருகையானது வேடன் பறவை போற் கத்தும் போது கூட்டமாக மயங்கி வரும் காட்ச்சியைப் போன்றதாகும்.

இறைவன் திருநாமத்தினை இசையோடு பாடும்போது இறைவன் மகிழ்வான் என்று கூறப்படுகின்றன. பஞ்சராத்திரத்தினை ஓதும் போது இறைவன் அருள்புரிவான் அதனை இசையுடன் ஒதும் முறையில் ஒதுதல் வேண்டும் அல்லாவிடின்,

‘சத்தம் மாறினால் அர்த்தம் மாறும்’ என்ற கருத்தினை தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் இத்தகைய கதையினை கும்பகர்னன் உடைய வரலாறு தெளிவுபடுத்துகின்றன.

ஈழத்தின் இசைக்கலையின் சிறப்பினை ‘பறாளை விநாயகர்பள்ளி, யாழ் நூல்’ என்பவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். இசை இன்று ஆலயகிரியா வைபவங்களில் இசையின்றிக் கிரியைகள் இல்லை எனும் அளவிற்கு இன்று ஆலயக்கிரியைகளோடு இணைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சோடசோபாசாரம் எனப்படும் 16 வகையான உபசாரங்களில் இசைக்கலை முக்கியம் பெற்றதுடன் மகோற்சவம் கும்பாபிஷேகக் கிரியைகளின் போது கணபதிதாளம் எனும் கிரியை வைபவத்தின் போது தவிலுக்குப் பூஜை செய்து அதற்கு கிரியை இடம் பெறுவதைப் பார்க்கின்றோம். கோயில்களில் செந்நெறியிசையாக பக்தியிசை வளர்ச்சி பெற்று வந்தது நாட்டார் இசையினூடாகப் பக்திநெறி முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இளங்கோவடிகள் அம்மானைவரி, கந்துகவரி பாடுவதற்கும் மாணிக்கவாசகர் சாழல், தெள்ளேணம் திருவுந்தி முதலியவை பாடுவதற்கும் நாட்டார் இசையே காரணமாகும். காவடி, கரகம், கும்மி, ஆகிய நேர்த்திக்கடன் நிகழ்ச்சிகளின் போது பக்தர்கள் ஒன்று சேர்ந்து உடுக்கடித்துப் படிச் செல்வது இன்றும் நடைபெறுகிறது.

சின்னமுத்து பொக்கிளிப்பான் ஆகிய தொற்று நோய்கள் கிராமங்களில் ஏற்பட்டால் உடுக்கடித்து மாரியம்மன் தாலாட்டு, கண்ணகிகதை, அம்மானை, என்பவற்றைப் பாடும் வழக்கம் இந்துக்களிடையே இன்றும் உள்ளது முன்னர் யாழ்ப்பாணத்தில் பெருவழக்காயிருந்த உடுக்கடி கதை இன்று மறைந்து கொண்டு வருகிறது.

இசைக்கலை கோயில் வழிபாட்டோடு இரண்டறக் கலந்ததோடு, ஆன்ம ஈடேற்றத்திற்குரிய சாதனமாகவும் இசைக்கலை விளங்குகின்றன. இத்தகைய இசைக்கலையானது 64 கலைகளில் சிறப்பான ஒன்றாக விளங்குகின்றன. முன்னர் பல இசைக்கருவிகள் பயன்படுத்தி இருந்தாலும், தற்காலத்தில் சில வாத்தியம் அற்றுப் போயும் அருமையாகவும் உள்ளது எனலாம். கலை ஒருவன் உடைய உள்ளத்துணர்வுக்கு உயிர் கொடுப்பதாகும். அவற்றில் சிறந்தது இசைக்கலையாகும்.

இன்று நாம் இறைவனை வழிபடுவதற்கு எமக்கு கிடைத்த பக்திப்பாடல் பன்னிரு திருமுறையாகும். திருமுறையினை நாம் பாடும்போது இறைவன் மகிழ்ந்து அருளுவான் என நம்பப்படுகின்றது இறைவன் கடைக்கண் பார்வை ஆன்மாக்கள் மீது படவேண்டுமாயின் இசையுடன் கூடிய பக்திப்பாடலினைப் பாடவேண்டும் திருமுறை பாடும்போது ஒழுங்குமுறையாக தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்ற ஒழுங்கிலாகும்.

இறைவன் புகழ்பாடுவதன் மூலம் நாம் நீண்டவாழ்வு, வினைகள் நீங்கும் உள்ளம் தூய்மை பெறும். அகத்தில் ஒளியுண்டாகும் வாழ்வில் மல்ச்சியுண்டாகும். இறையருள் கிடைக்கும். காரியசித்தி பெறமுடியும் எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனுடைய பாதார விந்தகத்தினை அடைந்து பேர் இன்பத்தின் நுகரமுடியும். இத்தகைய கருத்தினைக் கொண்டு இறைவனை அடைவதற்குரிய சிறந்த சாதனம் இசை என்றால் மிகையாகாது.

# விதியின் பயன்

### திரு காரை எம்.பி. அருளானந்தம் அவர்கள்

இது நடக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறோம் ஆனால் அது நடப்பதில்லை. நாம் “இது நடக்கக்கூடாது” என்று நினைக்கிறோம். ஆனால் அது நடந்து விடுகிறது. இதற்கு எதைக் காரணமாகச் சொல்வது? அதைத்தான் “விதி” என்று கூறுகிறார்கள். ஒரு சமயம் வைகுந்தத்தில் நாராயணனும் மகாலட்சுமியும் உயர்ந்த ஆன்மீகத் தத்துவங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பூலோகத்தில் நடப்பதெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தச் சமயத்தில் நமது பூலோகத்தில் பிட்சைக்காரன் ஒருவன் பிட்சையெடுத்துக் கொண்டிருந்தான். சாப்பாடு கிடைத்ததும் அதை எடுத்துக்கொண்டு தனியான ஓர் இடத்திற்குப் போனான். உட்கார்ந்தான்.

சாப்பிடுவதற்கு முன்னால் கடவுளை நினைத்து, நாராயணா! நாராயணா! என்று சொல்லி அந்த உணவை இறைவனுக்கு நிவேதனம் செய்துவிட்டுச் சாப்பிட ஆரம்பித்தான். இதை வைகுந்தத்திலிருந்த மகாலட்சுமி பார்த்தார். உடனே நாராயணனிடம் சொன்னாள்.

அதோ பார்த்தீர்களா? உங்களுடைய பக்தன் அவன் தினமும் பிட்சையெடுத்துவரும் உணவை முதலில் உங்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுப் பிறகு தான் சாப்பிடுகிறான் அப்படிப்பட்ட உங்களுடைய பக்தனை நீங்கள் பிட்சையெடுக்கும் நிலையில் வைத்திருக்கிறீர்களே. உங்களுக்கே இது நியாயமா?

அவனுக்கு நீங்கள் கொஞ்சம் செல்வத்தைக் கொடுத்து அவனை வசதியாக வாழவைக்கக் கூடாதா? என்று கேட்டாள் நாராயணன் புன்சிரிப்புடன் “இவன் முற்பிறப்வியில் செல்வந்தனாகத்தான் இருந்தான் அப்படி இருந்தும் இவன் யாருக்கும் எதுவும் கொடுத்து உதவவில்லை.

ஏழைகளுக்குத் தான, தர்மம் எதையும் செய்யவில்லை. அதனால்தான் இந்தப்பிறவியில் இப்படிக் கஷ்டப்படுகிறான் அது அவனுடைய விதியின் பயன்” என்று கூறி விளக்கினார். ஆனால் அவர் சொன்னதை மகாலட்சுமி ஏற்றுக்கொள்ளவில்லை.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? விதியாவது ஒன்றாவது! நாம் நினைத்தால் முடியாதது என்று ஒன்று இருக்கிறதா? இப்போது நான் அவனுக்கு உதவி செய்யப்போகிறேன்” என்றாள் மகாலட்சுமி “நீ என்ன செய்யப்போகிறாய்?” என்று வினாவினார் அவர். அவனுக்குக் கொஞ்சம் செல்வம் கொடுத்து அவனைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்கப் போகிறேன்!” என்றாள் மகாலட்சுமி.

“சரி உன் இஷ்டம்! செய்து பார்!” என்றார் நாராயணன் உடனே மகாலட்சுமி பூலோகத்தில் அந்தப் பிட்சைக்காரன் நடந்து வந்து கொண்டிருந்த வழியில் ஒரு பணமுடிப்பைப் போட்டாள் வழியில் பணமுடிப்பு இருப்பதைப் பார்த்து அவன் அதை எடுத்துக் கொள்ளட்டும் என்று இலட்சுமிதேவி நினைத்தாள்.

ஆனால் அந்த நேரத்தில் அந்தப் பிட்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? பார்வையில்லாதவர்கள் தெருவில் எப்படி நடந்து போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஓர் எண்ணம் அவனுக்கு அப்போது வந்தது.

ஆதலால் அவன் பார்வையில்லாதவர்கள் மாதிரிக் கண்கள் இரண்டையும் நன்றாக மூடிக்கொண்டு தட்டுத்தடுமாறி நடக்க ஆரம்பித்தான்.

இரண்டு கண்களும் மூடி இருந்ததால் வழியில் இருந்த பணமுடிப்பு அவன் பார்வையிற் படவில்லை. ஆகவே பாதையிலே பணமுடிப்பு இருந்ததைக் கவனிக்காமலே அதைத் தாண்டி அவன் சென்றுவிட்டான். அதன் பிறகு கண்ணைத் திறந்தான் ஆகா கண்ணில்லாதவன் மாதிரியே நடந்து விட்டோமோ! என்ற சந்தோஷத்திலே அவன் போய் விட்டான்.

அவன் பின்னால் ஒருவன் வந்து கொண்டிருந்தான் அவன் கண்ணில் அந்தப்பணமுடிப்பு பட்டது. அதை எடுத்துக்கொண்டு அவன் சந்தோஷமாக நடக்க ஆரம்பித்தான். நடந்ததையெல்லாம் வைகுந்தத்திலிருந்த நாராயணனும் மகாலட்சுமியும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

“என்ன நடந்தது பார்த்தாயா! அந்தப் பக்தனைப் பணக்காரனாக்க வேண்டும் என்று துடித்தயே…….. உன்னால் முடிந்ததா?” என்று பகவான் கேட்டார்.

அதற்குப் பிறகுதான் மகாலட்சுமியும் “உண்மைதான் பிரபு! விதிப்படிதான் எதுவும் நடக்கும் என்பதை இப்போது நான் ஒப்புக்கொள்கிறேன்!” என்றாள். இந்தக் கதையை அறிவுபூர்வமாகக் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம் “ஒரு பக்தனைப் பணக்காரனாக்க வேண்டும்” என்று கடவுள் நினைத்தாற் கூட அது முடியாது என்ற ஓர் உண்மை இந்தக் கதையில் அடங்கியிருக்கிறது இல்லையா? அப்படியானால் விதி யார் கையில் இருக்கிறது? மனிதனின் கையில்தான் இருக்கிறது.

அவன் நல்ல விதமாக நடந்து கொண்டால் விதியும் அவனுக்கு சாதகமாக இருக்கும் அப்படி இல்லாவிட்டால் இந்தப் பிட்சைக்காரன் விஷயத்தில் நடந்தது போன்றே கண் திறந்திருக்க வேண்டிய நேரத்தில் கண்ணை மூடியிருக்க வேண்டிய நிலை வந்துவிடும்.

### பிறஉயிர்களிடம் கருணை காட்டு

உள்ளத்தில் கருணை பொங்கிட வேண்டும்
  உயிர்களிடம் இரக்கம் காட்டவும் வேண்டும்
கள்ளத்தனம் பண்ணிப் பிறரை ஏமாற்றும்
  கயவரிடம் கூடக் கருணை நீ காட்டு
மெள்ளமெள்ள அவரை மேதினியில் நல்ல
  மேதைகள் ஆக்கிட விளைந்திட வேண்டும்
குள்ளமனம் கொண்ட கொடியவர் ஆயினும்
  கோபம் விடுத்துநீ குணமே உரைத்திடு

- கவிஞர் வ. யோகானந்தசிவம்

# திருவாசகம்

## திரு கு. கனகரத்தினம் அவர்கள்

வாதவூரா் திருவருளை எண்ணி மனம் உருகினார். வெள்ளம் அடங்கியதும் அணைகட்டுவதற்கு மதுரை மக்களுக்கு ஆற்றின் கரை பங்குகளாக அளந்து விடப்பட்டது. அதில் ஒரு பங்கு செம்மனச்செல்வி எனும் பெயருடைய வயோதிப மாதுவுக்குக் கொடுக்கப்பட்டது அம்மாது எவா் துணையும் இல்லாதவா் பிட்டவித்து விற்றுச் சீவனஞ்செய்பவா். தெய்வமே துணையென நம்பி வாழ்ந்தவா் அவா் தன் பங்கைக் கட்டுவதற்குக் கூலியாள் இல்லாது முறையிடுவதைச் செவிமடுத்த சோமசுந்தரப்பெருமான் கூலியாளாக வேடந்தாங்கி அவா் முன்வந்தார் அவா் பங்கின் அணையைக் கட்டுவதாகக் கூறி விட்டுப் பிட்டினைக் கூலியாக வாங்கி அமுதுசெய்தார். அணைகட்டுமிடம் சென்று மண்சுமந்து ஆடல்பல புரிந்தார். தூங்குவார் போல் தூங்கினார். மதுரை மன்னன் அவா்யார் என்பதறியான் அவரைத் தன்னிடம் வருவித்துக் கையிலிருந்த பிரம்பால் அவா் முதுகில் அடித்தான் அடித்த அளவில் கூலியாளாக வந்த பெருமான் ஒருகூடை மண்ணை உடைப்பில் கொட்டிவிட்டு மறைந்தார். மறைந்தவா் எங்கும் நிறைந்த பரம் பொருளல்லவா? அடித்த பிரம்படி அரசன், அரசி, மந்திரி, பிரதானிகள் மேலும் ஏனைய உயிர்கள் மேலும் பட்டது. எல்லோரும் வியப்பில் மூழ்கினா். வந்தவா் சிவபெருமானே எனத்தெளிந்தனா். வாதவூரா் இறைவன் தன் அடியாள் பொருட்டுக் கூலியாளாக வந்ததை எண்ணி வியந்தார். மன்னன் வாதவூரரை வணங்கி நின்றான். வாதவூரா் அமைச்சா் பதவியைவிடுத்து, மன்னனிடம் விடைபெற்றுக்கொண்டு தவவேடம் தாங்கித் திருப்பெருந்துறை சென்று குருநாதரை வணங்கி அடியார் கூட்டத்தோடு கலந்திருந்தார்.

ஞானகுருவாய் வந்த சிவபெருமான் தான் கயிலை செல்ல வேண்டியதைச் சீடா்களுக்கு உணா்த்தி அவா்களை அங்கு இருக்குமாறு பணித்தார் அடியவா்கள் குருநாதரைப் பிரியமனமில்லாது வருந்தினா். அதைக் கண்டகுருநாதா் இக்குருத்த மரத்தின் நிழலில் ஒரு தெய்வபீடம் அமைத்து அதில் நம்முடைய திருவடிகளைப் பிரதிஷ்டை வழிபாடுசெய்து வருவீா்களானால் ஒருநாள் பொற்றாமரை வாவியில் தீப்பிழம்பொன்றுதோன்றும் அதில் அனைவரும் மூழ்கி எம்மை வந்தடையலாம் என்று திருவாய் மலா்ந்து அடியார்கள் அங்கு நிற்கக் கயிலைக்குப் புறப்பட்டார். வாதவூரா் மட்டும் அவரைப்பின்தொடா்ந்து சென்றார். அவரைக் கண்ட குருநாதா் நீ என்னைப் பின் தொடா்ந்து வருதல் வேண்டா. உத்தரகோசமங்கை என்னும் திருப்பதிக்குச் சென்று அங்கு எண்வகைச் சித்திகளையும் பெற்று திருக்கழுக்குன்றம் முதலான தலங்களைத் தரிசித்துப் பின்னா் தில்லையை அடைவாயாக என்று கூறிச்சென்றார். மணிவாசகா் திருப்பெருந்துறைக் குருத்த மரத்தின் கீழ் ஒரு தெய்வீகப்பிடமமைத்து அதில் குருநாதரின் திருவடிகளை எழுந்தருளச் செய்து அடியார்களோடு தாமும் வழிபட்டு வரலாயினார்.

மணிவாசகா் திருவருட்போகத்தில் திளைத்துச் சிவபுராணம் முதலாக பல பதிகங்கள்பாடி அடியார் கூட்டத்துடன் பல நாள் திருப்பெருந்துறையில் இருந்தார் ஒருநாள் பொற்றாமரை வாவியில் தீப்பிழம்பு தோன்றியது அடியார்கள் அனைவரும் ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு அதில் மூழ்கினா் அம்மை அப்பராகிய பெருமான் இடபவாகனத்தில் தோன்றி அருட்காட்சி வழங்கியருளினார். அடியார்கள் அனைவரும் சிவகணங்களாயினா். இவ்வேளையில் கொன்றைமர நிழலில் சிவபோகத்தில் அமா்ந்திருந்த மணிவாசகா் திருக்குளத்தில் நடந்த காட்சியை யோகக் காட்சியிற் கண்டார். அடியார்களின் பிரிவாற்றாது வருந்தி குருநாதரின் திருவடிப்பிடத்தைப் பற்றிக் கொண்டு அழுதார் திருச்சதகம் என்னும் பாமாலையால் இறைவன் திருவருளைத் தோத்திரம் செய்தார்.

பின்னா் குருநாதா் தனக்குப் பணித்த அளாணையின் வழி திருவுத்தர கோசமங்கைக்குச் சென்று, குருந்தமா் கோலத்தைக்காட்டத் தரிசித்து பலசித்திகளும் கைவரப்பெற்றார். பின்னா் பல திருப்பதிகளை வணங்கிப் பாண்டி நாட்டைக்கடந்து சோழநாட்டைச் சோ்ந்த திருவிடைமருதூா் அடைந்து இறைஅருளைப் பெற்று நுகா்ந்துகொண்டு திருவாரூா், சீா்காழி, திருவண்ணாமலை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு தில்லை வந்தடைந்தார் அங்கு கோயிலின் கீழ்கரையில் தவச்சாலை அமைத்து அதில் எழுந்தருளியிருந்தார். தில்லையில் புத்தரை வாதில் வென்றும் ஊமைப்பெண்ணைப் பேசுவித்தும் திருவருளின் செயலை எல்லோரும் அறியச்செய்தார்.

இவ்வாறு மணிவாசகர் தில்லையில் வாழ்ந்து வரும்நாளில் ஒருநாள் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து தான் பாண்டியநாட்டைச் சேர்ந்தவரென்றும் சிவபிரான் மணிவாசகருக்காகச் செய்த அருட்செயல் உலகெங்கும் பரவியுள்ளது என்றும் வியந்துகூறி மணிவாசகர் பல சமயங்களிலும் பாடிய பாடல்களையும் முறையாகச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். மணிவாசகர் அந்தணரை அருகிருத்தித் தாம் பாடிய பாடல்களை முறையாகச் சொல்லி யருளினார். அந்தணரும் தம் திருக்கரத்தால் அவைகளை எழுதிமுடித்து 'பாவை பாடிய உமது திருவாயால் ஒருகோவை பாடுக' என்று கேட்டுக்கொண்டார். அவ்வேண்டுகோளுக்கு இணங்கிய மணிவாசகர் இறைவனது திருவடிப்பேற்றை உட்கருத்தாகக் கொண்ட இனியகோவையார் என்ற நூலை அருளிச்செய்தார். கேட்ட அந்தணர் அந்தநூலையும் தம் திருக்கரத்தால் எழுதி முடித்தார் பின்னர் அந்தணர் வடிவில் வந்த சிவபெருமான் மறைந்தார். அதைக் கண்ட மணிவாசகர் இப்படித் தன்னை ஆட்கொண்டவர் சிவபிரானே என்பதை அறிந்து ஆனந்தக் கண்ணீர் பெருகித் திருவருளை நினைந்து வணங்கினார்.

திருவாதவூரரின் திருவாசகத்தையும் திருக்கோவையையும் தம் கையால் எழுதிய சிவபெருமான் அந்நூல்களை உலகறியச் செய்யவிரும்பி நூலின்முடிவில் "திருச்சிற்றம்பலமுடையான்" கையெழுத்தெனக் கைச்சாத்திட்டுத் திருச்சிற்றம்பலத்தில் வாயிற்படியில் வைத்தருளினார் காலையில் கோயிலில் இறைனுக்குப் பூசை செய்யவந்த அருச்சகர் வாயிற்படியில்நூல் ஒன்று இருப்பதைக் கண்டு அதை எடுத்து ஆண்டவனால் இது தரப்பட்டதாகும் என்ற அன்புணர்வோடு விரித்துப் பார்த்துப் படித்தார். அவ்வேடுகளின் முடிவில் திருவாதவூரர் சொற்படி திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து என்று இருந்ததைக் கண்டு உடல் சிலிர்த்து இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய நூல்களில் இது தலையானது என்று புகழ்ந்து இந்நூலைப் பாடிய வாதவூரரைச் சென்று கண்டு வணங்கினார். திருவாயிற் படியில் இந்நூல் இறைவனால் வைக்கப்பட்டிருந்ததென்பதை அவரிடம் தெரிவித்தார். வாதவூரர் அதைக்கேட்டுத் திருவருளை எண்ணி வணங்கினார். இச்செய்தி அறிந்த அந்தணர் அனைவரும் அங்கு வந்து கூடினர். இந்நூலின் பொருளைத் தாங்களே விளக்கவேண்டும் என்று வேண்டி நின்றனர். அதற்கு மணிவாசகர் இதன் பொருளைத் தில்லைச்சிற்றம்பலத்தில் வந்து தெரிவிக்கின்றேன் என்று சொல்லி அவர்களோடு சிற்சபைக்கு எழுந்தருளினார். அங்குவந்து இந்நூற் பொருள் இச்சபையில் எழுந்தருளியுள்ள கூத்தப் பெருமானே ஆவார் என்ற சுட்டிக்காட்டி அச்சபையில் எல்லோருங்காண மறைந்தருளினார். இந்நிகழ்வினைக் கண்ட அனைவரும் வியந்து வாழ்த்தி நின்றனர் மாணிக்கவாசகர் கூத்தப்பெருமான் திருவடிகளிற் கலந்து பேரின்பநிலை எய்தினார்.

திருவாசகம் தமிழ்மொழிக்குச் சிறப்பாக உரிய பத்திச்சுவையைத் தன்னகத்தே நிறையக் கொண்டுள்ள சிறந்த நூலாகும் கற்போரைக் கவர்ந்து இறைபக்தியைக் வளர்க்கும் மாண்புடையது. திருவாசகத்துக்கு உருகாதவர் ஒருவாசகத்துக்கும் உருகார் எனபர் உலகோர். இது சம்பந்தமாகக் கற்றோர் தரும் கருத்துக்கள் மனம் நெகிழவைக்கின்றன கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் சிறுவர்க்குப்பாடிய தாலாட்டுப் பாட்டில்

தேவாரப்பாகும் திருவாசகத் தேனும்
நாவார உண்பதற்கோ நன் மானாய் வந்தாய் நீ"

என ஒருதாய் தன் மகனைத் தாலாட்டுவது நெஞ்சம் நெகிழ வைக்கிறது.

**திறன்மிகு அறிவையும்**

இடர் மிகு துயர்களைக்
களைந்து இன்பமதையருள்பவனே
சுடர் மிகு ஞான ஒளியை
உலகுக் உணர்த்துபவனே
கடல் சூழ் ஆற்றங்கரை
யுறையமர்ந் தருள்புரிபவனே
திடம் மிகு உறுதியும் திறன்
மிகு அறிவையும் தருவாய் சந்நிதியானே!

- ஜெயகேமலதா

# தாலி கொடுத்து குங்கிலியம் வாங்கிய செல்வர்

**திரு இ. சிவலிங்கம் அவர்கள்**

'விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார். கடவூர் வீரட்டனாரே' – (அப்பர்)

இப்பதிகம் திருக்கடவூர் என்ற தலத்தில் பாடப்பட்டது. இத்தலம் அட்டவீரட்டத் தலங்களில் ஒன்றாகச் சிறப்புற்றது. சிவபெருமான் யமனை உதைத்த நிகழ்ச்சி தரிசிக்கப் பெற்றதலம். அபிராமி என்ற பெயரில் தேவியார் எழுந்தருளி அபிராமிப்பட்டர் என்ற மெய்யன்பர் மூலம் அபிராமி அந்தாதியை உலகம் பெறத் தந்த தலம். அத்தேவியின் சந்நிதி அத்தலத்துக்கோர் தனிப்பெருமை. அத்துடன் குறித்த தூபத்திருத்தொண்டை அப்பர் சுவாமிகள் குறிப்பிட்டவாறு விரும்பி விதியினால் இயற்றி விசேடதரமான இம்மைப் பேறும், அம்மைப்பேறும் பெற்றுள்ள குங்கிலியக்கலயநாயனார் வாழ்ந்த பதி. இவர் முந்நூல் விளங்குகின்ற அந்தணகுலத்தைச் சேர்ந்தவர். இவர் இயற்பெயர் கலயர் இவரது தொண்டு குங்கிலியத்தூபம் இடுதல். இவரிடம் வேண்டியளவு நில, புலம், அடிமை, குடிமைகளோடு இருந்தவர். இருந்தும் சிவன் திருவருளினாலே எதிர்பார்க்கப்படாதவாறு வறுமையும் இவரை வந்தடைந்து கொண்டது. ஆனால் எக் கஷ்டப்பட்டும் குங்கிலியத் திருத்தொண்டு நடந்து வருகிறது. வறுமை நீடித்ததனால் நிலபுலன்களெல்லாம் விலை போயின.

ஒரு கட்டத்தில் குடும்பம் முழுவதும் ஒரே பட்டினி. இரண்டு நாட்களாகத் தொடர்கிறது பிள்ளைகளின் நிலையை உணர்ந்த கலயரின் மனைவி தனது கழுத்தில் இருந்து கழற்றப்படமுடியாத தாலியைக் கழற்றிக் கணவரின் கையிற் கொடுத்து இதைமாறி நெல் வாங்குங்கள் என்று வேண்டினார்.

அதற்குடன்பட்ட கலயர் நெற்கொள்ளவே நினைந்து சென்றுகொண்டிருந்தார். வழியில் ஒருவன் ஏதோ சுமந்த படி வருகின்றான் சுமந்து வரப்படும் பொருள் என்ன? இது குங்கிலியம் ஐயா எனச் சம்பாஷணை நடக்கிறது. சிவபூசைக்கான நறுமணக் குங்கிலியமா இது. அடியேனுக்கு நல்ல அதிஷ்டம் என்று கலயர் எண்ணுகிறார். தாலியையும் எடுத்து நீட்டி விடுகிறார் குங்கிலியப்பொதி கைமாறியதே தாமதம் கலயரைக் கணமும் தரித்து நிற்க விடாமல் துாண்டித்தள்ளுகிறது. நேரே கோவிலுக்கு வந்தார். தனது வழிபாட்டிலே ஈடுபட்டு அங்கே தங்கியும் விட்டார். கலயர் பலநாட் பட்டினி குடும்பமும் அப்படி வீட்டில் எதுவும் இல்லை இரவு நேரம் கலயர் மனைவியும் பிறரும் பட்டினியாலயர்ந்து கண்ணுறங்கி விட்டநிலை. திடீரெனக் கலயர் வீடு முழுவதும் வாழ்க்கைக்குரிய சகலபண்டங்களும் ஒன்றுமொழியாமல் வந்து குவிகின்றன. உறக்கத்தில் இருக்கும் கலயர் மனைவிக்கு வீட்டின் புதிய சூழ்நிலை உணர்த்தப்படுகிறது. மனைவியர் திருவருளை வியந்து உணவாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். ஆலயத்தில் தன் பணியில் இலயித்திருக்கும் கலயருக்கும் உணர்த்தப்படுகிறது. கலயர் மனை அடைந்தார். இல்லத்தில் புதிய சூழ்நிலை மங்கல குதுாகலமாக அவர் வரவேற்கப்படுகிறார். தாலிமாறிக் குங்கிலியம் வாங்கியிட்டதனால் வாய்த்த செல்வம் இது.

சிவனருட் சீலரான குங்கிலியக் கலயநாயனாருக்கு ஒருதடவை ஒரு செய்தி எட்டுகிறது. பனையைத் தல விருட்சமாகக் கொண்டு திகழுகின்ற திருப்பனந்தாள் சிவலிங்கம் பற்றியது. சிவாலயத்தின் பெயர் தாடகையீச்சரம் ஒரு காலத்தில் தாடகி என்ற ஒரு அந்தணி அதனைப் பூசித்து வந்தார். ஒருநாள் பூசை நிகழ்வின்போது வழமைபோலச் சுவாமிக்குச் சாத்த மாலையை இரு கைகளாலும் தொட்டெடுத்தபோது தற்செயலாக ஆடை நழுவிற்று. ஆடை கீழ் விழாமற் தடுக்கவேண்டிய கைகளை இடுக்கிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையால் அவள் நிமிர்ந்து கை நீட்டி மாலை சாத்தமுடியாத கஷ்டம் உருவாயிற்று.

இந்நிலையில் அவள் எடுத்த மலையை நழுவவிட்டு உடையைச் சீர்செய்யவே உடையை நழுவவிட்டு மாலையைச் சரியாகச் சாத்தவோ இயலாத இக்கட்டில் நின்று மனங்கலங்கிப் பெருவேதனையுற்றாள். மெய்யன்பினளாகிய அவள் கலக்கந் தீர்க்கத் திருவுளங்கொண்ட சிவபிரான் அவர் நின்ற நிலையில் வைத்தே மாலையை ஏற்கும் அளவிற்குத் தமது இலிங்கத் திருமேனியைச் சரித்துக் கொடுத்து மாலையை ஏற்றுக்கொண்டார். தாடகைக்காக சிவபிரான் அவ்விசேட அருள் புரிந்த காரணத்தால் அது தடகையீச்சரம் என்ற பெயர் பெற்றது. ஏனோ தெரியாது சரிந்த சிவலிங்கம் நெடுங்காலமாக சரிந்தபடியே இருக்கும் படியாயிற்று. கலயர் காலத்திலிருந்த சிவ பக்தியிற் சிறந்த மன்னனொருவனுக்கு அச்சிவலிங்கத் திருமேனியை எவ்வகையிலாவது நிமிர வைத்துக் காணவேண்டுமென்ற ஒரு பெரும் பேராவல். தன் காலாட்படை யானைப்படை இலிங்கத்தில் பெருவடங்கள். சங்கிலிகள் பூட்டி நெடும் வரிசையாக அரசபடை வீரர்களும் ஆனைகளும் நின்று இழுத்தே இழுத்து சலிப்படைந்த நிலையிலும் சிவலிங்கம் நிமிர்ந்த பாடில்லை. இச்செய்தி குங்கிலியக் கலயருக்கும் காதில் எட்டுகிறது இக்காட்சியை நேரில் பார்க்கிறார். கயிற்று வடத்தின் தொங்கலையெடுத்து கழுத்தில் மாட்டிக் கொண்டு இழுக்கிறார். எல்லோரையும் தூக்கிவாரிப் போட்டு விடும்படியான பேரற்புதம் நிகழ்ந்து விடுகிறது உலகை வென்று விட்டார் கலயர். அரச பலம் முழுவதும் சேர்ந்தே அவர் ஆத்ம பலத்துக்கு நிகராகாதாயிற்று அப்போது சம்பந்தப்பட்ட அரசனும் அவர் காலடியில் இந்த வகையான திவ்விய உள்ளப்பண்பு விளங்க நின்றவர் குங்கிலியக் கலயநாயனார்.

**சுவாமி அருகில்**

உபவாசம் என்றால் உள்ளத்தையும் உணர்வையும் சுவாமியருகில் வைப்பது என்பது பொருள். உப சமீபமாக, வாசம் - வசிப்பது என்று பொருள். தெய்வ சிந்தனையுடன் இருக்கவேண்டும்.

# சிறுவர் ஞானத்தமிழ் நாடகம்
# கடவுள் எங்கும் இருக்கின்றார்

**ஸ்ரீவிசுவாம்பா விசாலாட்சி (மாதாஜி) அவர்கள்**

காட்சி - 1
**இடம் - அரச அரண்மனை**
**பாத்திரங்கள் - அரசர், அமைச்சர், வித்துவான்**

(புதிதாக வந்த அரசருக்கு அமைச்சர் இடங்களைச் சுற்றிக் காண்பிக்கின்றார். அங்கு வித்துவான் சபை காணப்படுகின்றது. அப்போது அமைச்சர் வயதான வித்துவானைச் சுட்டிக்காட்டி)

அமைச்சர் :- "அரசே தங்களிடம் ஏதாவது சந்தேகம் இருந்தால் இவரிடம் கேளுங்கள் இவர் அதனை நன்றாக விளக்கித் தெளிவு செய்வார்."

அரசர் :- "அப்படியா, மிகவும் நல்லது. ஐயா ஆஸ்தான வித்துவான் அவர்களே! எனக்கு நீண்டநாட்களாக மூன்று சந்தேகங்கள் என்னை வருத்தி வருகின்றன. பல அறிஞர்களிடம் கேட்டபோதும் அவர்களால் அம்மூன்று சந்தேக வினாக்களைத் தெளிவுபடுத்த முடியவில்லை. அந்த மூன்று சந்தேக வினாக்களைக் கூறுகின்றேன். நீங்கள் மூன்று வினாக்களின் சந்தேகங்களை விலக்கி விளக்கமாகவும் தெளிவாகவும் விடை கூறாவிடில் உமது சிரம் சேதம் செய்யப்படும்.

வித்துவான் :- (நடுங்கியபடி) "அரசே தங்களின் சந்தேகங்கள் என்னவோ?"

அரசர் :- "கடவுள் எங்கே இருக்கிறார்? அவர் எந்தத் திசையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்? அவர் என்ன செய்துகொண்டு இருக்கிறார்? இந்த மூன்று வினாக்களுக்கும் நாளை மாலைக்குள் விடை கூறவேண்டும். வேதம் கூறுகின்றது என்றெல்லாம் கூறக்கூடாது எனக்குத் தெளிவாக விடை கூறவேண்டும்".

காட்சி - 2
**இடம் - வித்துவான் வீடு,**
**பாத்திரங்கள் - வித்துவான், பேத்தி**

(வித்துவான் கவலையுடன் அரசனுடைய வினாக்களுக்கு விடை தேடிப் புத்தகங்களைப் புரட்டுகின்றார். பேத்தி விளையாடிவிட்டு வருகின்றாள்)

பேத்தி :- "தாத்தா சாப்பிட்டு விட்டீர்களா?"

வித்துவான் :- "சாகப்போகிற எனக்குச் சாப்பாடு எதற்கு அம்மா?"

பேத்தி :- ஏன் தாத்தா அப்படிச் சொல்கின்றீர்கள்
(தாத்தா சால்வையை எடுத்து உதறித் தோளில் போட்டுக்கொண்டு வெளியே செல்கின்றார்)

பேத்தி :- “எங்கே தாத்தா போகின்றீர்கள்?”

வித்துவான் :- (கோபித்து) “போகும் போது இப்படிக்கேட்காமா?”

பேத்தி :- “ஏன் தாத்தா இப்படிக் கோபிக்கின்றீர்கள். இவ்வாறு இதுரை ஒருநாளும் நீங்கள் கோபித்தது இல்லையே”

வித்துவான் :- “என்ன செய்வது முட்டாள் இராசா மூன்று கேள்விகளைக் கேட்டு நாளை மாலைக்குள் தெளிவான விடை சொல்லாவிட்டாள் சிரச்சேதம் செய்வதாக கூறிவிட்டான் நான் விடை சொல்லத் தெரியாமல் தவிக்கின்றேன்.

சிறுமி :- “தாத்தா அரசர் அப்படி என்ன கேள்விகள் கேட்டு விட்டார்.”?

வித்துவான் :- நீ போ அம்மா. நீ சிறுபிள்ளை உனக்கு என்ன தெரியும்.

சிறுமி :- இல்லை, தாத்தா நீங்கள் அந்தக் கேள்விகளைச் சொல்லத்தான் வேண்டும். சொல்லு சொல்லு (பிடிவாதமாக நிற்றல்)

வித்துவான் :- நீ சும்மா இரு இக்கேள்விகளுக்கு நானல்ல யாருமே சரியான விடை காணமுடியாது.

சிறுமி :- தாத்தா நீங்கள் அந்தக் கேள்விகளைச் சொல்லாவிட்டால் நானும் இந்த இடத்தை விட்டு நகரப் போவதில்லை.

வித்துவான் :- அரசர் கேட்ட முதற்கேள்வி கடவுள் எங்கே இருக்கிறார்? இரண்டாவது கேள்வி கடவுள் எந்தத் திசையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்? மூன்றாவது கேள்வி கடவுள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்?

சிறுமி :- இவ்வளவுதானா தாத்தா இந்தச் சின்னக் கேள்விகளுக்கு நானே இராச சபைக்குச் சென்று விடை கூறுகின்றேன். இங்கேயே நீங்கள் இருங்கள்.

வித்துவான் :- விளையாட்டுக்கு இதுதானா நேரம்

சிறுமி :- இராச சபைக்கு ஒடுகின்றாள்.

**காட்சி - 3**
**பாத்திரங்கள் - அரசன், சிறுமி, அமைச்சர்.**
**இடம் - அரண்மனை**

சிறுமி :- மாகாராசாவே வணக்கம். நான் ஆஸ்தான வித்துவானின் பேத்தி.

அரசன் :- உன் தாத்தா எங்கே?

சிறுமி :- நீங்கள் பெரிய கேள்விகளைக் கேட்டிருந்தால் தாத்தா நேரில்வந்து விடைகூறி இருப்பார். தாங்கள் கேட்டகேள்விகள் மிகவும் சிறிய கேள்விகள் அதனால் என்னைத் தங்களுக்கு விடைகூற அனுப்பியுள்ளார்.

அரசன் :- (ஏளனமாகக் கைதட்டிச் சிரித்தல்) என்னம்மா நீயா விடை கூறப்போகின்றாய்?

சிறுமி :- மகாராசா, என்னைச் சிறுபெண் என்று நினைக்காதீர்கள். பெரிய யானையை அடக்குவது மிகவும் சிறிய அங்குசம், மிகவும் பெரியதேரை அசையச் செய்து ஓடவைப்பது சிறய அச்சாணி பெரிய குவியலாக உள்ள பஞ்சை மிகவும் சிறிய தீக்குச்சி எரித்து விடுகிறது பெரிய பெரிய கருங்கல்லைச் சிற்பமாக்குவது சிறிய உளி. ஆகவே வயது குறைந்த நான் தங்களின் கேள்விகள் மூன்றல்ல முப்பதல்ல மூவாயிரம் என்றாலும் பதில் சொல்கின்றேன்.

அரசன் :- அம்மா! மூன்று கேள்விகள் தான் எனக்குச் சந்தேகமுடையவை அவைகளுக்குப் பிரத்தியட்சமான தெளிவான விளங்கக் கூடிய மனதை விட்டகலாத விடைகளைக் கூறினால் போதும்.

சிறுமி :- உங்கள் முதற் கேள்வி!

அரசன் :- கடவுள் எங்கே இருக்கின்றார்?

சிறுமி :- மகாராசா, நீங்கள் கேள்வி கேட்டு விட்டீர்கள் நான் விடை சொல்லப்போகின்றேன். எனினும் நான் தற்சமயம் குரு நீங்கள் சீடர் சம்மதந்தானே!

அரசன் :- சரியம்மா, அப்படியே ஆகட்டும்.

சிறுமி :- நான் கூறப்போவதற்கு இடையில் ஏன் எதற்கு என்று எதுவும் கேட்கக்கூடாது இப்போது பெரிய பாத்திரம் நிறையப் பால் கொண்டுவந்து வையுங்கள்

அரசன் :- யாரங்கே? (சேவகர்கள் ஓடிவருகிறார்கள்) பெரிய அண்டா நிறையப் பசுப்பால் கொண்டுவந்து வையுங்கள் (சேவகர்கள் அவ்வாறு செய்கின்றார்கள் அப்போது ஆஸ்தான வித்துவானும் வந்து சேருகின்றார்.)

சிறுமி :- மகாராசா இந்த அண்டாவில் உள்ள பாலில் நெய் இருக்கின்றது. உங்கள் கண்ணுக்குத் தெரிகின்றதா?

அரசன் :- (பாலை உற்றுப் பார்க்கின்றார்.) பால்தான் தெரிகின்றது. நெய்தெரியவில்லையே! நெய்யைப் பார்க்க முடியவில்லையே.

சிறுமி :- மகாராசா பாலில் உள்ள நெய் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை அதனால் பாலில் நெய்யில்லை என்று கூற முடியுமா? உங்கள் முதல் கேள்வி கடவுள் எங்கே இருக்கின்றார்? என்பது தானே எனவே பாலில் நெய் இருக்கின்றது. பாலின் மேலே இருக்கின்றதா? நடுவில் இருக்கின்றதா? அடியில் இருக்கின்றதா?

அரசன் :- பாலில் எங்கும் நெய் இருக்கின்றது.

சிறுமி :- பாலில் எங்கும் நெய் இருப்பதுபோலவே, கடவுளும் எங்கும் அங்கிங்கெனாதபடி இருக்கின்றார்.

அரசன் :- அம்மா, நீ சொன்னது போல இதுவரை யாரும் எனக்குத் தெளிவாகக் கூறவில்லை. அவர் சொன்னார் இவர் சொன்னார் என்றுதான் கூறி வருகின்றார்கள். உன்னுடைய காட்சி பூர்வமான விடை எனக்குப் பூரணமாகத் தெளியவைத்து விட்டாய்.

சிறுமி :- அரசே! உங்கள் இரண்டாவது கேள்வி என்ன?

அரசன் :- கடவுள் எந்தத் திசையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்.

சிறுமி :- அரசே ஒரு உயர்ந்த பீடமும் ஒரு விளக்கும் கொண்டு வாருங்கள்

அரசன் :- யார் அங்கே? (சேவகர்கள் ஓடிவருகிறார்கள்)

அரசன் :- உடனே உயர்ந்த பீடமும் ஒரு விளக்கும் கொண்டு வாருங்கள். (அவ்வாறு அவர்கள் கொண்டு வருகின்றார்கள்)

சிறுமி :- (பீடத்தின் மீது விளக்கை வைத்துத் தீபம் ஏற்றுகின்றாள்) மன்னர் பெருமானே! இந்த விளக்கு எங்கே, பார்த்துக்கொண்டு எரிகின்றது ஒளி எந்தப்பக்கம் தெரிகின்றது.

அரசன் :- விளக்கு எல்லாப் பக்கமும் பார்த்துக் கொண்டு எரிகின்றது. எல்லாப்பக்கமும் அதன் ஒளி பிரகாசமாகத் தெரிகின்றது.

சிறுமி :- இந்த விளக்கைப் போலவே கடவுளும் எல்லாப்பக்கமும் பார்த்துக்கொண்டே இருக்கின்றார்.

அரசன் :- அம்மா, நீ சொன்னது போல இவ்வளவு தெளிவாகச் சாத்திரங்கள் கூடக் கூறவில்லையே (ஆஸ்தான வித்துவானின் பேத்தியாகிய இச்சிறுமி இவ்வாறு தெளிவாகக் கூறினால் வித்துவான்)

சிறுமி :- அரசே உங்கள் மூன்றாவது கேள்வி என்ன?

அரசன் :- கடவுள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்?

சிறுமி :- அரசே இதற்கு விடை கூறப் பதினைந்து நிமிடங்கள் செல்லும் நான் இராசாவாக நடிக்க அனுமதி வேண்டும்.

அரசன் :- அப்படியே ஆகட்டும்

சிறுமி :- அரசனின் சிம்மாசனத்தில் அமருகின்றான். யாரங்கே மந்திரியைப் பிடித்துச் சிறையில் வையுங்கள் அவரைச் சிரச்சேதம் செய்யுங்கள்

அரசன் :- இதெல்லாம் என்ன!

சிறுமி :- அதுவா? குப்பைமேடு கோபுரம் ஆகின்றது. கோபுரம் குப்பை மேடாகின்றது. இப்படித்தான் ஆண்டவன் வேலை. அரசன் நேராகச் சென்று வித்துவானின் கால்களில் வீழ்ந்து வணங்குகின்றான்.

# கடவுட்கொள்கையும் வழிபாடும்

## திரு K.S. ஆனந்தன் அவர்கள்

தமிழ்மக்களிடம் கடவுட்கொள்கையானது தொன்மையாகவே தோன்றிய இது பிறரிடம் இரவலாக பெற்ற ஒன்றோ, பின்பற்றிய ஒன்றோ அன்று. இயற்கையை இயங்கச் செய்யும் பேராற்றலுடைய ஒரு சக்தி கருத்துக்கும், கண்ணுக்கும் எட்டாததாய் எதுவென்று சொல்லமுடியாததாய் நிற்பதென்று உண்மையை தமிழர்கள் தாமாகவே பண்டுதொட்டு உணர்ந்துள்ளனர். மனம், மொழி மெய்களைக் கடந்து நிற்கும் அச்சக்தியைக் கடவுள் என்ற சொல்லாற் குறித்தனர். அருவுருவாக நிற்கும் அச்சக்தியைத் தாம் நினைக்கும் உருவில் தமது ஊனக் கண்ணாற் பார்க்கும் வண்ணம் எழுந்தருளிக் காட்சிதந்து தமது குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என ஆதங்கப்பட்டனர். எமக்கு இன்று கிடைத்திருக்கும் மிகப்பழைய நூலாகிய தொல்காப்பியத்திலே கடவுளைக் கண்ணாற் கண்டுகொள்ளும் முறையில் இறைவழிபாடு நிகழ்ந்து வந்தது என்பதற்குச் சான்று பெறுகின்றோமாதலின் இவ்வழிபாடு தொன்மைவாய்ந்த ஒன்று என்பதில் ஐயம் கொள்ள இடமிருக்கவில்லை.

இத்தகைய தொன்மைவாய்ந்த வரலாற்று வளர்ச்சிமுறையை ஆராய்ந்தறிய மாட்டாத எம்மவரிற்சிலர் அருவமாக உள்ள கடவுட்கொள்கையைத் தமிழர்கொள்கை என்றும் உருவமாகவும், ஆலயமாகவும், அவற்றில் உள்ள உருவத்திருமேனிகளும் அவற்றை வழிபடும் முறைகளும் பிறரிடமிருந்து தமிழர்களிடம் ஊடுருவியது என்றும் கூறிக் கடவுட்கொள்கையை ஓர் இரண்டும் கெட்டான் நிலைக்குள்ளாக்கியுள்ளனர். இவ்வழிபாட்டு முறை தொன்மைவாய்ந்த ஒன்று என்பது பண்டைய இலக்கியங்களிற் பரந்து காணக் கூடியதாகவுள்ளது.

அந்நிய நாட்டவர் படையெடுப்பால் அவர் தம் மொழியையும், மதத்தையும், கலாச்சாரப் பண்பாடுகளையும் எம்மக்கள் மீது அதிகாரத்துடன் திணித்தனர். ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் அவர்களால் அளிக்கப்பட்ட ஆதாய வருமானங்களால் மனம்மாறி, மதம்மாறி, கலாச்சார இயல்புகளையே மாற்றிக் கொண்டனர். எமது மக்களைப் பொறுத்தவரை ஈழத்தில் ஓர் நாவலர் தோனறியிருக்காவிடில் சைவமும் தமிழும் இருந்த இடம் தெரியாது வரலாற்றில் படித்தறியும் ஒரு நிலையே ஏற்பட்டிருக்கும். சைவமும் தமிழும் காப்பாற்றப்பட்டது என்றால் அது நாவலர் பெருமானால் என்றால் மறுதலிக்கமுடியாத ஒன்று ஆனால் எமது சமயச் சடங்குகளிலும் கிரியைகளிலும் நாகரிகசக்தி பூசப்பட்டு வருகின்றது என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

'மந்திரமாவது நீறு' என்றுபடித்தவர்கள் எத்தனைபேர் இன்று திருநீறு அணிகின்றனர். சமயநெறி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கின்றனர். இதனைப் பெரியவர்கள் தமது இளைய தலைமுறைகளுக்குச் சொல்லிக் கொடுக்காது ஏனோதானோ என்று இருப்பதால் சிறியவர்கள் அதனை உதாசீனம் செய்யும் நிலை காணப்படுகின்றது. தாய்மொழிக் கல்வியும் சமயக்கல்வியும் எமது பாடநெறியில் முக்கியம் பெறுவதால் இவற்றைக் கற்பவர்கள் பாடத்திட்டத்துக்குட்பட்ட விடயங்களுடன் கற்றுப் பட்டம் பெற்றுத் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்கின்றனர். பெரும்பாலானவர்களின் செயற்பாடுகள் இத்தகைய நிலையிலேயே காணப்படுகின்றன.

சமய இலக்கியங்களையோ, புராணங்களையோ, சமயப்பெரியார்கள், ஞானிகளின் வரலாறுகளையோ கற்கும் நிலை குறைந்தே காணப்படுகின்றது. சமயத்துறையில், கிரியைகளில் உள்ள மருத்துவ உண்மைகளை விஞ்ஞான பூர்வமான மறைமுக நிதர்சனங்களைக் கூட உகந்தறியமுடியாத பாமரர்களாய் இருக்கின்றனர். உதாரணமாக எமது சமயத்தில் சில தீட்சை முறையில் எவ்வளவோ விஞ்ஞான உண்மைகள் அடங்கியிருக்கின்றன. இதனைக் கேலிபண்ணுவோர் போத்தல்களில் அடைக்கப்பட்டு வரும் மருத்துவகுணமுள்ள தைலங்களைத் தடவிக்கொள்கின்றனர். இதே போன்று ‘கண்டதே காட்சி கொண்டதே கோலம்’ எனும் செயற்பாட்டில் எமது சமயச்சடங்குகள், கிரியைகள் நாகரிக முலாம் பூசப்பட்டு மற்றவர்களால் கேளிக்கைகளாக்கப்படும் நிலையையும் காண்கின்றோம். திருமணம் போன்ற சடங்குகளில் இவற்றை நாம் காணக்கூடியதாயுள்ளது.

சடங்குகள் தாம் இப்படியென்றால் பெரும்பாலான ஆலயங்களில் வியாபார அடிப்படையிலான தில்லுமுல்லுகள் வளர்ந்தோங்கிவிட்டன. காசேதான் கடவுளடா. அந்தக்கடவுளுக்கும் இது தெரியுமடா என்ற சினிமாக்கவிஞனின் வாக்கு மெய்யுருப் பெறுவதைக் காணமுடிகின்றது ஆலயநிர்வாகமோ, அர்ச்சகரோ ஆசாரமற்றவராகவும் நல்லொழுக்கமற்றவராகவும் காணப்படுகின்றனர். ஆகமவிதிகளுக்குட்பட்டுச் செயற்படும் அர்ச்சகர்களைக்கூட நிர்வாகமோ ஆகமவிதிகளை அறியாதவர்களோ கட்டுப்படுத்தித்தாம் சொல்வதைச் செய்யவேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் நிலையையும் காணமுடிகின்றது. சைவாகமங்களையோ திருமுறைகளையோ கற்றறியாதவர்களும் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்காது அதிகாரப்பற்றுக் கொண்டோர்களும் ஆலயங்களை நிர்வகிப்பதும் ஆகமவிதியறியாது அர்ச்சகர்கள் இருப்பதும் தான் காரணம் என்பதை எல்லோரும் அதாவது நன்மனத்துடன் நடுநின்று ஆராய்வோர் ஒப்புக்கொள்வர்.

இன்று புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசிப்போர் சிலர் இந்து ஆலயங்களை நிறுவி எமது கடவுட்கொள்கையையும், மதத்தையும் வெளிநாட்டில் பாதுகாக்கின்றார்கள் என்று கூறுவதில் எவ்வளவு தூரம் உண்மைத் தன்மையுள்ளது? இன்றும் மதம்மாறுபவர்கள் உள்நாட்லும் சரி, வெளிநாட்டிலும் சரி மதம்மாறிக் கொண்டிருக்கின்றார். இவர்களே எமது மதத்தைப்பற்றி அவதூறான பிரசாரங்களையும் மேற்கொண்டு வருவதையும் நாம் காண்கின்றோம். இதன் உண்மை நிலையை ஆராய்ந்து பார்ப்போமானால் சுயலாபத்திற் கருத்துடையோரே இப்படி நடந்துகொள்கின்றனர். வேறு ஒருசாரார் பழந்தமிழ்மரபு என்று கூறி எமது சமயத்தினை கொச்சைப்படுத்தி சடங்குகளை இழிவுபடுத்தி சுய விளம்பரத்தினைத் தேடிக் கொண்டு திருப்தியடைகின்றனர். இவர்கள் யாவரும் ஒரு உண்மையை விளங்காமல் உள்ளனர். தொன்மைவாய்ந்த எமது கடவுட்கொள்கையையும், மதத்தையும், உணர்ந்தறியாத அறிவிலிகளாகவே பிறரால் கருதப்படுகின்றனர். ஆத்மீகவாழ்வு இருக்கும் நம்பிக்கை உங்களுக்கு இல்லாவிடினும் அதை நீங்கள் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும் அது நம் இயற்கையுடன் சேர்த்து பிணைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை விட்டால் நாம் அழிந்துவிடுவோம் என்று சுவாமி விவேகானந்தர் கூறியதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். இன்று ஆலயங்களும் மடங்களும் அறநிலையங்களும் எமது சமய உண்மைகளை பல்வேறு வழிகளிலும் பரப்புவதற்கு எடுக்கும் பயனுள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கதாயினும் இம்முயற்சி திருவினையாக்கவேண்டும் என்பதே சான்றோர்கள் சமயப் பெரியோர்கள் ஆத்மஞானிகளின் பிரார்த்தனையாகும்.

## “நிலையொன்றி நீ வருந்தவேண்டாம்”

இலையென் றிரங்கி யிரக்கப் புகுந்து
நிலையொன்றி நீ வருந்தவேண்டாம் - அலையொன்றி
மன்னுதுறைக் கந்தவனத் தருகே யாறுமுகப்
பொன்மலையொன் றுண்டங்கு போ.

மேற்படிபாடல், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களால், பொலிகண்டி கந்தவனநாதர் மேல் பாடப்பெற்ற “கந்தவனநாதர் நான்மணிமாலை நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். 1928ஆம் ஆண்டு இந்நூல் சோமசுந்தரப்புலவரின் மாணாக்கராகிய திரு க. வேலுப்பிள்ளை அவர்களால் மட்ராஸ் சிவகாமி விலாசம் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இற்றைக்கு 78 ஆண்டுகளுக்கு முன்னே, “கந்தவனத்தருகே ஆறுமுகப் பொன்மலை ஒன்று உண்டு அங்கு போ” எனத் திருவாய் மலர்ந்திருப்பது ஒருகணம் சிந்திக்கத்தக்கதாகும். திரவியம் போலப் பாடல்கள் படைக்கப்பட்டுள்ளன. மிகவும் ஒடிந்தநிலையில் காணப்பட்ட இந்நூலை ‘வாசித்துப் பார்’ எனக் கட்டளையிட்டது போல என்மனம் ஈர்க்கப்பட்டிருந்தது. (உண்மையிலே கந்தவனப் பெருமானின் தித்திக்கும் பாடல்கள்) இதே போலவே தான், செல்வச்சந்நிதி முருகனுக்கும் அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயாவும் அறுபதுகளில் எழுதிய நூலினைத் தேடுகிறேன் கிடைக்கவில்லையே என்ற கவலை இத்தகு பாடல்களையெல்லாம் காலத்தின் தேவைகருதி மீண்டும் பதிப்பிக்கவேண்டிய சூழ்நிலையை முருகப்பெருமான் உண்டாக்கவேண்டும் என யான் பிரார்த்திக்கின்றேன்.

கந்தவனநாதர் நான்மணிமாலையும், பதிகமும் கொண்ட இந்நூல், சிறிய எழுத்துக்களால் கோர்க்கப்பட்ட 50 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. சம்பந்தப்பட்ட ஆலயப் பரிபாலனப் பெரியார்களின் அனுமதியோடு மேற்படி நூலினை மறுபதிப்புச் செய்வதற்கு யாராவது ஆவனபுரிவீர்களாக இருந்தால் அவர்கள் புண்ணியவான்களேயாவர். ஞானச்சுடர் மூலம் முருகன் விடைதருவான் என்பது எனது நம்பிக்கை.

**கே.எஸ். சிவஞானராஜா.**

# இளைஞர்களே விழித்துக்கொள்ளுங்கள்

**திரு இரா. செல்வவடிவேல் ஆசிரியர் அவர்கள்**

சைவ சமயத்தின் அடிநாதம் வேதம். வேதம்கூறும் கருத்துக்களைப் பாமரரும் அறியவேண்டி, உருவானவை இதிகாசங்களும் புராணங்களும் இதிகாசங்களை காந்தசம்மிதை எனவும் புராணங்களை சிசுசம்மிதை எனவும் பெயர் பெறும்.

காந்தசம்மிதை என்பது இரு நண்பர்களுக்கிடையேயான உரையாடல் பாணியில் அமைவது சிசுசம்மிதை என்பது குழந்தைகளுக்குச் சொல்வதாக அமையும் இலக்கியமாகும் ஆதலால் தான் புராணங்களில் அளவு கடந்த கற்பனை காணப்படுகிறது மனிதப்பிறப்பின் நோக்கத்தை உணரவைப்பதுதான் வேதங்கள், இதிகாசம், புராணம் ஆகியவற்றின் கருவான கருத்தாகும்.

இன்றைய இளம் சமுதாயம் வாசிப்புப் பழக்கத்தையிழந்து வருகிறது. அறிவியல் வளர்ச்சி காரணமாக உருவான நவீன சாதனங்களின் வளர்ச்சி நேரமின்மையைத் தோற்றுவித்துள்ளது என்பது பொதுவான கருத்தாகும். இத்தகைய சூழ்நிலையில் நமது சமயம் கூறும் நல்ல கருத்துக்களை இளம் சமுதாயத்திற்குக் கொண்டு செல்வது எப்படி? இது விடயமாகச் சிந்திக்கவேண்டிய அவசியமும், அவசரமும் உருவாகியுள்ளது வாழ்விற்குச் சமயம் என்பதை மறக்கும் ஒரு சமுதாயம் எவ்வகையிலும் விழுமியங்களை நோக்கிச் செல்ல முடியாது. சமய விரிநூல்களின் கருப்பொருளை உள்ளடக்கிய சுருக்கம் எழுதப்படல் வேண்டும். சில பக்கங்களில் வெளிவரக்கூடிய கதைகளை, கட்டுரைகளை வாசிக்கக்கூடிய நிலையை கல்விச்சாலைகள் ஏற்படுத்த முடியும். திருமுக கிருபானந்த வாரியார் சுவாமிகள் எழுதிய கந்தபுராணச் சுருக்கம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். கந்தபுராணச் சுருக்கத்தைப் படிக்கும் இளம் சமுதாயத்திற்கு மூலத்தைக் கற்கவேண்டும் எனும் விருப்பம் உருவாகும் என்பது திண்ணம். நமது சமயக் கருத்துக்களைச் சுருக்கம் எனும் பெயரில் சிதைக்கக்கூடாது எனக்கூறும் பெரியவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் இன்றைய காலச்சூழலை உணரவேண்டும். அறவே அற்றுப்போவதை விட ஓரளவாவது தெரிந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். என்பது அடியேன் கருத்தாகும்.

இளைஞர்களின் இன்றைய தேவை என்ன? இது விடயமாகப் பல சிந்தனைகள் உண்டு. இளம் சமுதாயத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவனவாகச் சிலவற்றைப் பட்டியற்படுத்தலாம். நல்லபெற்றோர், நல்ல ஆசிரியர் மூலமான சிறந்த கல்வி, உயர்ந்த இலட்சியம், நல்லநட்பு, உயிரினும் மேலான காதல், பெரியோரை மதிக்கும் பண்பு என்பவற்றை அடக்கலாம்.

21ஆம் நூற்றாண்டில் பெற்றோரின் மனோநிலை பெரிதும் மாற்றமடைய வேண்டும். நாற்சாரவீடுகட்டி வாழ்வாங்கு வாழ்ந்த பழைய வாழ்க்கைமுறை கனவாகி விட்டது. பொருளாதாரத்தை நோக்கிப் பெற்றோரின் சிந்தனை செல்கிறது. இதன் விளைவாகத் தம் பிள்ளைகளை நன்னெறிப் படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை பிள்ளைகளை அரவணைத்து வழிப்படுத்தவேண்டிய தேவை அதிகரித்துள்ளது என்பதை அனைவரும் அறிவர். கல்வியில் அக்கறைப்பாடு குறைவதும் வன்முறை நாட்டமும் தேவையற்ற பொழுதுபோக்குக்கள் , மதுப்பாவனை என்பன பிள்ளைகளிடத்தில் வேகமாக வளர்ச்சிகண்டுள்ளன. பெற்றோரின் சரியான வழிகாட்டல் இது விடயங்களில் அவசியம். ஆசைப்பெருக்குடன் மதுவுக்கு அடிமையாகியுமுள்ள பெற்றோர் தம்பிள்ளைகளை எவ்வாறு வழிப்படுத்த முடியும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது - குறள் 45

இக்குறட்கருத்தின்படி அன்பும் அறவழிவாழ்வும் வாழ்வின் பண்பாடாகும்.

கல்விக் கோட்பாட்டில் பாரிய மாற்றம் ஏற்படுத்தப்படுவது அவசியமாகும். விஞ்ஞானக் கல்வியுடன் சமயக்கல்வியும் சிறப்பாக அமையவேண்டும். விஞ்ஞானக்கல்வி பொருளாதார வளர்ச்சியைத்தரும் மனிதனை மனிதனாக வாழவைப்பதற்குச் சமயக்கல்வி அவசியமாகும். மாணவர்களுக்கு முன்மாதிரியாக ஆசிரியர் இருக்கவேண்டும். வாழ்ந்துகாட்ட வேண்டும் ஆசிரியர்களின் கையில்தான் மாணவர்களின் எதிர்காலம் இருக்கிறது. கம்பனின் இராமாயணத்தில் மன்னாதி மன்னனாக இருந்த தசரதன் தனது குரு வசிட்டர் வரும்போது எல்லாம் எழுந்துநின்று வணங்கி அவா் ஆசனத்தில் அமா்ந்த பின்னா் அரியணையில் அமா்வான். தசரதன் இராமன் இருவரினதும் நற்பண்புக்கு வசிட்டரே காரணா்.

அக்காலத்தில் குருகுலம் சிறந்த ஆசிரியர் மூலம் தேவையான அனைத்துக் கல்வியையும் வழங்கியது. நம் கல்விச் செயற்பாடுகள் மனிதர்களை உருவாக்கவேண்டும். மாறாக இயந்திரங்களை உருவாக்க முயலுகின்றன.

உலகிற்கு என்றும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவா்களில் அப்பரடிகளும் ஒருவராவார். என்கடன் பணிசெய்து கிடப்பதே என்பதும் குறிக்கோள் இன்றி வாழ்ந்து கெட்டேனே! என்பதும் அவரது மணிவாசகங்கள். ஒவ்வொருவருக்கும் உயா்ந்த இலட்சியம் இருக்கவேண்டும். அந்த இலட்சியத்திற்காக உழைக்க வேண்டும். இலட்சியமற்ற வாழ்வுப் பயணத்தைப் பெரும்பாலான இளைஞா்கள் மேற்கொண்டு வருகிறார்கள் இலட்சியம் சிறிதாக இருக்கக்கூடாது. மிகவும் உயா்வானதாக அமையவேண்டும். இலட்சியத்தின் இறுதி நிலையை அடைவதற்கு உழைப்பது என்ற திட சங்கற்பத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

வாழ்வின் வெற்றி நல்ல நண்பா்களை சாா்ந்ததாகும். நண்பா்களைத் தெரிவதில் தவறிழைப்பவா்கள் சேற்றிற் புதையுண்டவரே ஆவா் மீள்வதற்கு வழியேயில்லை. நண்பன் செய்த தவற்றை மற்றவா்களிடம் காட்டிக்கொடுக்காமல் அவனைக்காப்பாற்றி அழைத்துவந்து அவனது தவற்றை சுட்டிக் காட்டித்திருத்துபவனே சிறந்த நண்பன் ஆவான். இதனையே வள்ளுவா்

நகுதற் பொருட்டு அன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு - குறள் 784

என்று இயம்பினாா்.

இன்று வெல்லக்கட்டியை நாடிவரும் எறும்புகளாக இருப்பவா்களே நண்பா்போலக் காணப்படுகின்றனா். சிறுகல்லை வெல்லங்கட்டியின் மேல் இடுகையில் எறும்பு ஓடுவது போல துன்பம் கண்டு ஓடிவிடுபவா்கள் எப்படி நண்பா்களாக முடியும்? நண்பனைத் தெரிவதில் தவறுசெய்து விடாதீா்கள். வாழ்வே இருண்டுவிடும். செல்வச்சீமானாக பட்டுப் பீதாம்பரதாரியாக இருந்த கண்ணபிரானும் கிழிசல்களுக்குச் சொந்தக்காரனாக குசேலரும் ஒருவரை ஒருவா் கட்டியணைக்க முடிந்தது. எதனால் குருகுலம் தந்த கல்வியும் சிறந்த நட்பும் அல்லவா!

# கைதடி மாதாஜி

## இலிங்கேஸ்வரர் ஆலய அடிக்கல் நாட்டுவிழா

02.04.2006ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00மணியளவில் கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய சுபவேளையில் மேற்படி வைபவம் ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமத்தில் சிவஸ்ரீ மகாலிங்க சிவக்குருக்கள் சிவஸ்ரீ குணசேகரக் குருக்கள் தலைமையில் நிகழ்வுற்றது. தவத்திரு சுவாமி கணேசானந்தா அவர்களால் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நிகழ்த்தப்பெற்றது.

அதனையடுத்து தலைவர் திருவாளர் குழந்தைவடிவேலு அவர்கள் "குருவின் மகத்துவம்" பற்றி உரையாற்றினார்கள். தலைவரவர்கள் தமது உரையினிடமாக 1960இல் தாபிக்கப்பெற்ற இவ்ஆச்சிரமம் ஈழத்தில் வாழ்ந்த சச்சிதானந்த சுவாமிகள், யோகர் சுவாமிகள், குடைச்சுவாமிகள், கோடரிச்சுவாமிகள், கடையிற்சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் ஆகியோரின் பாதம் பதிக்கப் பெற்ற மகத்துவமுடையதென்றும் இவர்களின் வழிகாட்டலில் தான் மாதாஜி செல்லம்மா வாழ்ந்துவந்தாரென்றும் கூறினார்கள்.

மேலும் தமது உரையினிடமாக அம்மையார் குருபோதனையைப் போற்றி வாழ்ந்தமை காரணமாக முன்பு சிறுகுடிசையாக இருந்த இவ்ஆச்சிரமம் வளர்ச்சியுற்று மேலோங்கி இன்று இலிங்கேஸ்வரர் ஆலயமாக மாறும் நிலைக்கு ஆகின்றதென்றும் குறிப்பிட்டார்கள்.

மேலும் காங்கேசன்துறைக் குருக்கள் என்னும் அந்தணப் பெருமகனார் மாதாஜியின் வழிகாட்டலில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்றும் கூறினார்கள்.

அடுத்து உரையாற்றிய தவத்திரு கணேசானந்தா சுவாமிகள் தமது உரையினிடமாக, நாம் நமது பிறப்பின் பெருமையை உணரவேண்டுமெனில் குருத்துவப்பணியில் தம்மை அர்ப்பணித்த சுவாமிகளின் வாக்குக்களை அமிர்தவாக்குகளாகப் போற்றவேண்டும். நமது சமயகுரவர்கள் அருளிய திருவருட்பாக்களைப் பொருளுணர்ந்து ஓதுதல்வேண்டும் என்றும் இங்ஙனம் வாழப்பெற்றால் "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்பதனை உணரலாமென்றும் கூறினார்கள்.

மேலும் உரையாற்றுகையில் இவ்ஆலய அமைப்புக்குக் கைதடிவாழ்மக்கள் அனைவரும் உதவிகள், ஒத்துழைப்புக்கள் வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

அடுத்து உரையாற்றிய வர்த்தகப்பிரமுகரும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் "ஞானபண்டித ஆன்மீகச் செம்மல்" என்று விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட திருவாளர் கங்கைவேணியன் அவர்கள் தமது உரையினிடமாக தாம் மாதாஜி அம்மையாருடன் குறுகிய காலம்தான் பழகியதாகவும் அவரிடமிருந்து வரும் ஒவ்வொரு வாக்கும் அமிர்தவாக்கே என்றும் எமது வருவாயில் ஒரு பகுதியை நல்ல பணிகளுக்கென ஒதுக்குகின்ற பொழுதே, எமது பிறப்பின் பெருமையை உணர்ந்து கொள்ளலாம். என்று மாதாஜி கூறிய அருள்வாக்கினைத் தாம் மேற்கொண்டொழுகி வருவதாகவும் கூறினார்கள். அத்துடன் இவ்ஆலயம் அடுத்த வருடப் பூஜைக்கு முன் கட்டி முடிக்கப்படுதற்கு உதவுவதன் மூலம் குருவின் திருவருளைப் பெறலாமென்றும் கூறினார்கள்.

அடுத்து உரையாற்றிய சிவதிருச்செந்தில்நாதர் மனிதராகப் பிறந்த நாம் மானுடப்பிறப்பின் பெருமையை உணர்ந்து, 'ஆக்கைக்கு இரைதேடி, அலமந்து காக்கைக்கு இரையாவதே இவ்வுடம்பு' இவ்வுடம்பிலான உயிரை முத்தியடைதற்கான நெறியிற் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

மேலும் உரையாற்றுகையில் இராவணன் சிறந்த சிவபக்தனென்றும் ஆனால் பெண்ணாசையால் அழிந்தவன் என்றும் சூரன் ஆணவத்தால் அழிந்தவன் என்றும் ஆனால் அவன் தான் கொண்டிருந்த பக்திமை காரணமாக முருகப்பெருமானிடத்தே கொடியாகவும் சேவலாகவும் உள்ளானென்றும் கூறினார்கள்.

இவ்வைபவத்தில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் அமிர்தவாரிதி செ. மோகனதாஸ் சுவாமிகளும் கலந்து சிறப்பித்தார்கள் தெல்லிப்பளைத் துர்க்காதேவஸ்தானப் பரிபாலனசபைத் தலைவி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினதும் கொழும்பு இராமகிஷ்ணமிஷன் தவத்திரு. ஆத்மகானந்த சுவாமிகளினதும் சிவதொண்டன் நிலைய தவத்திரு. செல்லத்துரை சுவாமிகளினதும் ஆசிச்செய்திகள் வாசிக்கப்பட்டன.

மேலும் இவ்வாலயம் பூர்த்தியடைவதற்கு ஆதரவு நல்கும் சைவஅன்பர்கள் நிதியுதவியாகவோ பொருளுதவியாகவோ உதவிஅளித்து பூர்த்தி செய்வதற்கு உதவிபுரியும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

வள்ளிச்சன்மார்க்கம்
திரு முருகவே பரமநாதன் அவர்கள்

ஞானபாதமாகிய சன்மார்க்கமாவது, எல்லாக்கலைஞானங்களும் புராணங்களும் வேதங்களும் சாத்திரங்களும் சமயநூல்களுமாகிய பலவற்றையும் ஆராய்ந்தறிந்து, பலவகைப்பட்ட சமயங்களிலும் கூறப்படும் பொருளின் இயல்புகள் யாவும் பூருவபஷமாகக் கண்டு, பதி பசு பாச லக்கணங்கள் கூறும் சிவாகம நெறியே சித்தாந்தமெனத் தெளிந்து, காட்சி, காட்சிப்பொருள், காண்பான் எனப்பிரித்தறியும் சவிகற்பஞானத்தையுங் கடந்து அம்மூன்றுமன்றி அத்துவிதமாய் இயைந்த அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் மாட்டு நிருவி கற்பஞானத்தாற் செய்யும் வழிபாடாகும்.

சன்மார்க்கம் - சத்தியநெறி
முப்பொருள்விளக்கம் (பக் 165) ச. குமாரசுவாமிக்குருக்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் நாற்பாதங்கள். தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் நான்கு நெறிகள் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் நான்கு முத்தி நிலைகள், (சாயுச்சியம் - பரமுத்தி) சிவலோகத்தில் இருப்பது சிவனுக்குச் சமீபத்தில் இருப்பது. சிவரூபமாதல் சிவனோடு ஐக்கியப்படல் என்று இவை வகுக்கப்படும். அப்பரடிகள் (தாசமார்க்கம்) சம்பந்தர் (சற்புத்திரமார்க்கம்) சுந்தரர் (சகமார்க்கம்) மாணிக்கவாசகர் (சன்மார்க்கம்) நால்வரும் காட்டியவழி இவை. (மார்க்கம் - வழி) செந்நெறியே சன்மார்க்கம். சைவம் பேசும் முப்பொருள் உண்மை இறை. உயிர், தளை என்ப. எனவே மீண்டும் இவ்வுயிர் உடம்பு பெறாதிருக்கும் நிலைகாண இம்மனிதப்பிறப்பு ஒன்றிலே தான் முடியும் இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஏதுவருமோ? அறிகிலேன் என்பது தாயுமானவர் திருவாக்கு. ஆதலின் நமக்கு இந்தச்சரீரம் கிடைத்தது சிவபெருமானை வணங்கி முத்தியின்பம் பெறுதற்பொருட்டேயாம் என்பார் நாவலர். ஓன்பது மார்க்கங்கள் - ஸ்ரவணம், கீர்த்தனம், விஷ்ணுமை, மரணம், சாதசேவனம், வந்தனம், அர்ச்சணம், தாஸ்யம், ஸ்நேகம், ஆத்மநிவேதனம் வாக்குக்கு அருணகிரியெனப் பேசப்படும் அருணகிரியார் தந்த சந்தத் திருப்புகழில் வள்ளிச்சன்மார்க்கம் பேசும் இத்திருப்பாடல் வள்ளிமலைக்குரியது.

கள்ளக்கு வாற்பை தொள்ளைப்பு வாற்பை
துள்ளிக்க னார்க்க யவுகோப
கள்வைத்த தோற்பை பொள்ளுற்ற காற்பை
கொள்ளைத்து ராற்பை பசுபாச
அள்ளற்பை மாற்பை ஞெள்ளற்பை சீப்பை
வெள்ளிட்ட சாப்பி சிதமீரல்
அள்ளச்சு வாக்கள் சள்ளிட்டிழாப்பல்
கொள்ளப்ப டாக்கை தவிாவேனோ
தெள்ளித்தி சேர்ப்ப வெள்ளத்தி மாற்கும்
வெள்ளுத்தி மாற்கு மருகோனே
சிள்ளிட்ட காட்டி லுள்ளக்கி ரார்க்கொல்
புள்ளத்த மார்க்கம் வருவோனே
வள்ளிச்சன் மார்க்கம் விள்ளைக்கு நோக்க
வல்லைக்கு ளேற்று மிளையோனே
வள்ளிக்கு ழாத்து வள்ளிக்கல் காத்த
வள்ளிக்கு வாய்த்த பெருமளே

முருகசெவ்வேள் ஐந்தாம் திருமுறை 317

குழாம் - கூட்டம், தெள் அத்தி சேர்ப்ப – தெளிவுபெற்ற அறிவுநிறைந்த தெய்வயானையின் தலைவரே! வெள்அத்திமாற்கும் - வெள்யானையையுடைய இந்திரனுக்கும், வெள்உத்தி மாற்கும் - வெண்மையான பாற்கடலிற் பள்ளிகொள் திருமாற்கும், மருகோனே – திருமருகரே! சில் இட்ட காட்டில் உள்ள – சில்வண்டுகள் நிறைந்த கானகத்தில் வாழ்ந்த, கிரார்கொல்புள் - கிரார்தர்களான வேடர்கள் கொல்கின்ற பறவைகள் உள்ள, அத்தமார்க்கம் - காட்டுவெளியில், வருவோனே – வருபவரே! வள்ளி சன் மார்க்கம் - வள்ளிப்பிராட்டியார் அனுட்டித்த நன்னெறி என்னும் அனுபவத்தை, விள்ளைக்கு – கேட்ட தந்தைக்கு, நோக்க வல்லைக்குள் ஏற்றும் - ஒரு கணப்பொழுதில் உபதேசித்த, இயையோனே - இளம் பூரணனே! வள்ளிக்குழாத்து – வள்ளிக்கொடிகள் கூட்டமாய் நிறைந்திருக்கின்ற, வள்ளிக்கல் காத்த – வள்ளிமனையில் தினைப்புனங்காவல் செய்த, வள்ளக்கு வாய்த்த – வள்ளிப்பிராட்டிக்கு வாய்த்த, பெருமாளே – பெருமையில் மிகுந்தவரே! கள்ளகுவால்பை – கள்ளத்தனமான, வஞ்சனை பொய் முதலிய துர்க்குணங்கள் நிறைந்தபை, தொள்ளைப் புலால்பை - ஒட்டைகளையுடைய மாமிசப்பை, துள் இக்கனார் - துள்ளுகின்ற கருப்புவில்லையுடைய மன்மதனால் உண்டாகின்ற, கயவுகோபம் - தளர்ச்சிக்கோபமாகிய, கள்வைத்த தோற்பை, கள்ளை வைத்த தோற்பை பொள் உற்ற காற்பை – பொள்ளென விரைந்து செல்லும் காற்றடைந்தபை, கொள்ளைதாற்பை – யமன் கொள்ளை கொண்டு போகின்ற செத்தையானபை பசுபாச அள்ளற்பை – ஆன்மா (உயிரும்) ஆணவமும் சேர்ந்த சேற்றுப்பை, மாற்பை – மயக்கத்துக்கு இடமானபை, ஞெள்ளற்பை – குற்றங்கள் நிறைந்தபை, சீப்பை – கீழ் நிறைத்தபை, வெள்இட்ட – கலப்பில்லாத, அசா – தளர்வுடைய, பிசிதம் ஈரல் இறைச்சி இவைகளை அள்ள - அள்ளி உண்ண, சுவாக்கள் - நாய்கள், சளஇட்டுஇழா – சள் என்று இழுத்து குலைத்து, பல்கொள்ளப்படு ஆக்கை - பல்லினாற் கடித்துக் கொள்ளப்படும் இந்த உடம்பைத் தவிர்வேனோ. ஒழிக்கமாட்டேனோ.

உரை – (திருமுருக கிருபானந்த வாரியார் பாகம்)

முருகவேள் திருமுறை தந்த ஆசான் தணிகைமலை செங்கல்வராய முதலியாரின் தொகுப்பிலும் உரை எழுதப்பட்டுள்ளமையால் படித்துப்பார்க்கவும்.

வள்ளிச்சன்மார்க்கம் :- வள்ளியனுட்டித்த உண்மைநெறி.

வள்ளிநாயகியார் முருகவேளை நினைந்து தன்னைமறந்து, தலைவன்தாள் தலைப்பட்டு நின்றார் அந்தநிலை வந்தபோது இறைவன் தானேவந்து அருள்புரிகின்றார். இதுவே இறைவனையடையும் நெறி. இந்த இரகசியநெறியை முருகவேள் முக்கட்பிரானுக்கு உபதேசம் செய்தருளினார் என்று உணர்க. வாரியார்.

வள்ளியம்மையார் கைக்கொண்டு ஒழுகினஇந்த நன்னெறியே இறைவனை வசப்படுத்தக் கூடியநெறி என்னும் இந்த இரகசிய நெறியைத்தான் முருகப்பெருமான் சிவபிரானுக்கு உபதேசித்தார் என்றும் அருணகிரியார் இத்திருப்புகழில் எடுத்துக்காட்டுகிறார்.

இத்திருப்புகழில் குவாற்பை, புலாற்பை, தோற்பை, காற்பை, துராற்பை, அள்ளற்பை, ஞெள்ளற்பை, சீப்பை என்ற ஒன்பது சொற்களும் உடம்பின் இழிவுபற்றிப் பேசுகின்றன. சீவார்ந்த அழுக்கொடுதிரியும் சிறுகுடில் என்றார் மணிமொழிப்பிரான் அருணகிரியார். பட்டினத்தாரும் உடல் நிலையாமையைச் சாடுகின்றார். உடம்பும் உயிரும் சேர்ந்தது தான் வாழ்வு. உயிர் போனால் உடல் நாறுமென்று எரிப்பர். புதைப்பர் எனினும் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்பார் திருமூலர். உண்மையில் வச்சிரகாயம் படைத்தவனல்லன் மனிதன் சுடலை சேர்வது சொற்பிரமாணம் (அப்பர்) சுடலைக்குப் போகாமல் இருக்கவும் முடியாது. போனவை திரும்பிவரவும் முடியாது. மயானத்தைச் சமரசம் உலாவுமிடமென்றார் கண்ணதாசன். ஆண்டியென்ன அரசனென்ன – அங்கே அந்தஸ்தை இழப்பர். எப்படி நாம் விவாதிப்பினும் உயிரின் ஈடேற்றம் உடலின்றியமையாது. நீரின்றிவாழ்வு அமையாதது போல் இந்த உண்மையை உணர்த்த வந்த பிரயோகம் "வள்ளிச்சன்மார்க்கம்" பிறப்பறுக்கவந்த பிறவியே மானுடம். எனவே இதை வெல்ல வேண்டும் இதற்கு வள்ளி அநுட்டித்த நிலையைக்கூறும் அப்பர் வாக்கு.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றேநீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே.

6:25.7

எனவே எவரொருவர் தன்னை (யான்எனது) இழந்து தலைவனை நாடுகின்றாரோ அவரை எம்பெருமான் தானே நாடிவந்து அருள்புரிந்து தன்னோடு இணைத்துக்கொள்வான் இதையே தாடலைப்படல் (தாள் + தலை = தாடலை) என்பர். யான் எனது அற்ற இடமே திருவடியாம் என்பது குமரகுருபரர்வாக்கு. (கந்தர் கலிவெண்பா) எனவே சிட்டுக்குருவி போல்விட்டு விடுதலையாக முனைவோம்.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல குறள். 4

## எந்தனையே மகிழ்விக்கும் எழில்மிகு ஞானச்சுடரே

உந்தனைக் கையிலெடுத்தால் உள்ளமே பரவசமாய்
உருகியே போய்விடும் உத்தமப் புத்தகமே
சிந்தனையைத் தூண்டும் சிறந்த நற்கட்டுரைகளும்
சிந்தையில் இனித்திடும் சிறப்புமிகு கவிதைகளும்
கந்தனையே நினைக்க வைக்கும் கவின்மிகு காவியங்களும்
களிப்பினையே ஊட்டிடும் கருத்துக் கலசமன்றோ
எந்தனையே மகிழ்விக்கும் எழில்மிகு ஞானச்சுடரே
என்றென்றும் பல்லாண்டு ஏற்றமுடன் வாழியவே!

ஆறாகப் பெருக்கெடுக்கும் அல்லல்வினை போக்கிடவே
ஆனந்தமே தந்து நல்லருளொளி பரப்பியே
கூறாகச் சூரனையே கொன்றொழித்த கூர்வேலன்
தாளினையே கும்பிடுவோம் குறைதீர்ப்பான் குமரன்
நீறாக நெற்றியிலே நித்தமும் நாம் பூசிவந்தோம்
நின்மலனே நின்பாதம் நினைத்திடவே நாளும்
பாறாங்கல் மனமும் பனிபோல உருகிடுமே உந்தனது
பாதமலர் பணிந்தோம்சுடர் பல்லாண்டு வாழியவே!

புண்ணியமே செய்திட்ட புவிமாந்தர் நாங்கள்
பூதலமே புகழ்ந்திட மாதவமே செய்தோம்
கண்ணியமாய் ஞானச்சுடர் கதிரொளிபரப்பி நிதம்
கட்டியமே கூறி நிற்கும் கலைஞானப் பெட்டகமே
எண்ணியதையெந்நாளும் ஏற்றியே போற்றிட
எங்களருமைப் புதுநூலே வாழிய பல்லாண்டு
மண்ணிலே நின்புகழ் மாண்புடனே மெருகேறி
மகிமையுடன் வாழியவே மனதார வாழ்த்துகின்றோம்.

- சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

# வாழ்க்கையில் சைவமும் அதன் மேன்மையும்

கலாநந்தினி குமாரசாமிஐயர் அவர்கள்

அகில புவனங்களையும் படைத்தும் காத்தும் வரும் மேலாம் சிவபரம்பொருளை முழுமுதற்கடவுளாகக் கொண்டு மலர்ந்த சமயம் சைவசமயமாகும். "சைவம்" எனும் சொல்லின் பொருளே சிவசம்பந்தமுடையது என்பதாகும். சிவம் எனும் செம்பொருள் அம்மெய்ப்பொருள் அதுவே பண்டும் இன்றும் என்றென்றும் நிலைத்திருக்கும் அழியாப்பெரும் பொருளாகும். நாம் இவ்வுலகின் கண் ஐம்புலன்களால் அறிகின்ற, பார்க்கின்ற, உணர்கின்ற அனைத்துப் பொருட்களும் மாறும் அழியும் தன்மையும் கொண்டவை. காலம் எனும் சுழலில் அனைத்தும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இக்கணத்தில் இருப்பது மறுகணத்தில் மாறும் அல்லது இல்லாதொழியும். ஆனால் இக்கணத்திலும் இனிவரும் எக்காலத்திலும் எப்பொழுதும் பழைமைக்குப் பழைமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் என்றென்றும் நித்தியப் பொருளாக நிலைத்திருப்பது சிவம் எனும் செம்பொருளே. அத்தகைய மேலாம் பரம்பொருளின் வடிவாக, அளப்பரும் கருணையின் விளைவாக இவ்வுலகம் விளங்குகிறது.

இயற்கையின் இனிய கொடைகளாகிய சூரியனின் சுடரொளியும் வானின்று வரையாது வரும் மழையும், தண்மை சேர்க்கும் இளந்தென்றலும், சுற்றிச்சுழலும் சூறாவளிப் பெருங்காற்றும், விண்ணளாவி நிற்கும் மலைச்சிகரங்களும் பாய்ந்து செல்லும் நதிகளும், சூழநின்றார்ப்பரிக்கும் விரிந்துபட்ட சமுத்திரங்களும் பூமியின் இயற்கைஎழில் வளங்களும், எனப்பல்வேறு வடிவங்களில் இறைவனின் கருணை வெளிப்பாட்டைக் கண்டு களிக்கின்றோம். அவற்றை அநுபவித்து ஆனந்திக்கிறோம். அப்பரம்பொருளின் கருணைக்கு எல்லையே இல்லையென்னும் வகையில் அற்புதமான விளையாடல்களைக் காண்கின்றோம். அத்தகைய எல்லையற்ற கருணைக் கடலாகிய சிவபரம்பொருளை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சைவசமயத்தவர்களாக வாழ நாம் என்ன புண்ணியம் செய்தோம் என்று நினைக்குந் தோறும் உள்ளம் பரவசமடைந்து வியப்படைகிறது.

சைவத்தின் மேன்மையும் தொன்மையும் வரையறைக்கப்பாற்பட்டவை. தொன்மையை நோக்கும் போது, சிந்து வெளியில், ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்ற இடங்களில் நடாத்தப்பட்ட தொல்லாராய்வுகள் சான்று பகருகின்றன. அதற்கு முற்பட்டகாலம் எத்தனை என்பது தெரிய முடியாத ஒன்றாக இருக்கிறது. காலத்தின் தோற்றமே சிவபரம்பொருளின் ஆடல் என்றால் மிகையாகாது. தொன்மையின் மேன்மைபோன்று சைவம் தன்னகத்தே கொண்டொளிரும் கோட்பாடுகள், கொள்கைகள், அதன் உயரிய பண்புகள் என்பன சைவத்தின் மேன்மையை எடுத்தியம்ப வல்லன.

சைவசமயத்தை இன்றுவரை தாங்கி நிற்கும் மூலவேர்களாக இருப்பன. வேதங்களாகும். அதன் தண்டுகளாகவும் கிளைகளாகவும் விளங்குவன ஆகமங்களும் உபநிடதங்களுமாகும். வேதங்கள் இறைவனாலேயே உருவாக்கப்பட்டவை. வேதங்ளைக் கொண்டே சைவசமயம் எனும் சனாதனதர்மம் நன்கு வேரூன்றி உலகெலாம் உணர்ந்து ஓதப்படும் சமயமாக நிலைபெற்று விளங்குகிறது. மாபெரும் தவசிரேஷ்டர்களாகிய முனிவர்களும் ரிஷிகளும், குருசிஷ்ய முறைமையிலேயே வேதசிவாகமங்களையும் இன்று வரை போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். எனும் போது சைவசமயத்தின் கட்டுக்கோப்பை வியக்காமல் இருக்கமுடியாது.

சைவசமயம் சாதாரண மானுட வாழ்விற்கு என்ன கூறுகிறது என்று சிந்திக்கும் போது வாழ்க்கையை வரையறை செய்யும் பண்புடைமைகளை நோக்கின் சைவத்தின் மகத்துவம் தெற்றெனத் தெரிகிறது. சைவசமயம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகூறுகிறது. தனியே துறவுநிலையையோ, வானப்பிரஸ்த நிலையையோ எடுத்துக்கூறவில்லை. மண்ணிற் பிறந்தால் வாழ்வு என்பது உண்டு என்ற கொள்கையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மானுடவாழ்வு பாவமானது என்றோ புறக்கணிக்கப்படத்தக்கது என்றோ கூறவில்லை. அரிதினும் அரிதாகவே மானுட வாழ்வு கிடைத்திருக்கின்றது என்று போற்றி நிற்கிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் தலையானது என்பதனை எடுத்தியம்பி அதற்கமையப் பற்பல நெறி முறைகளை வகுத்து வைத்துள்ளது.

வாழ்வின் ஆரம்பம் பிறத்தல் என்றால் இறுதி இறத்தல் என்பதே நியதி. இவ்விரண்டும் நிலைகட்கும் இடைப்பட்ட குறுகியகாலம் என்பது மிகவும் பெறுதற்கரிய காலம். காலமோ குறுகியது காலத்தின் பெறுமதியோ விலைமதிப்பற்றது. ஒவ்வொரு கணத்தையும் நாம் மிகக் கவனமாகச் செலவிடவேண்டும். ஏனெனில் சென்றகாலம் திரும்புவதில்லை. எனவே பெறுமதிமிக்கதான ஒவ்வொரு கணப்பொழுதினையும் நாம், கண்டு உடுத்து உறங்கி அவமே போக்காது மண்ணிற் பிறந்ததன் பெரும்பயனை அடைதல் வேண்டும் என்பதே சைவம் காட்டும் நெறியாகும். "எமக்கு இவ்வுடல் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே" என்பது நாவலர் பெருமானின் திருவாக்காகும்.

நாயன்மார்களும் தமது வாழ்க்கயையே எமக்கு முன்னுதாரணமாக்கி வாழ்ந்து காட்டியுள்ளனர் ஆலயதரிசனம் அறப்பணிகள் கருணை மனத்தினராய்ப் பிறர்க்குச் சேவை செய்தல் என்பன அவர் தம் வாழ்வில் இடம்பெற்ற சிறப்பம்சங்களாக விளங்கியுள்ளமை நோக்கத் தக்கது. நாயன்மார் அறுபத்து மூவருள் சமய குரவர் எனப்போற்றப்படும் நால்வர் அருளிய தேவார திருவாசகப்பாடல்கள் எமக்கு வாழும் வழிமுறைகளைக் கூறி எம்மை நல்லாற்றுப்படுத்துகின்றன. "தலையே நீ வணங்காய்" எனும் நாவுக்கரசரின் திருவங்க மாலைப்பாடல்களே எமக்குப் போதிய தெளிவைத் தரவல்லன. மணிவாசகரின் திருவாசகப் பாடல்களோ எம்மை முத்திநிலைக்கு இட்டுச் செல்லும் ஏணிப்படிகளாக உள்ளன. செவ்வேட் குமரனின் திருவருள் பெற்ற அருணகிரிநாதரின் திருப்புகழ் எமக்குப் பக்தி நெறியறிவித்து எம்மைப் பரவசமடைய வைக்கின்றது. இத்தகைய அற்புதமான கருவூலங்கள் யாவும் செம்மைநெறிநிற்க எமக்கு உறுதுணையாக உள்ளன.

பிறவி எடுத்ததன் பயன் யாது? என்று நாம் சிந்திப்பதில்லை. வந்தோம் வாழ்கிறோம். போகும் நாள் வந்தாற் போவோம் என்று இருக்கிறோம். அரிதினும் அரிதாகக் கிடைத்த மானுட வாழ்வை மேன்மைப்படுத்துகிறோம் இல்லை. அரிய மானுடவாழ்வைச் செம்மையுற வைக்கும் எத்தனையோ செயன்முறைகளை எமது சமயம் எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளது. பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் எனும் நான்கு நிலைகளில் மானுட வாழ்வை வரையறை செய்கிறது. கல்வியின் மேன்மை எழுத்தில் வடிக்கமுடியாதது. "கண்ணுடையர் என்போர் கற்றோர்" என்றும் "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்றும் பற்பலவாறு கல்வியின் மேன்மை பேசப்படுகிறது. அது மட்டுமன்றி 'இளமையிற்கல்' என்றதன்படி சிறுபராயமே கல்வியின் ஆரம்பமாக அமைகிறது. இக்காலக் கல்வி முறைகள் எவ்வளவு பயனளிக்கின்றன என்று சிந்திப்போமானாற் பலன் என்பது மிகமிகக் குறைவாகவே உள்ளது. வாழ்க்கையைச் செம்மை செய்யாத எமது கலாச்சாரம் பண்பாடுகளைப் போதிக்காத தற்காலக் கல்விமுறை எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பது கேள்விக்குறியாக உள்ளது. கல்வி என்பது ஒருவனைச் சான்றோன் என எடுத்துரைக்க உதவவேண்டும். அதுவே கல்வியின் பயன் இக்கல்விமுறை இன்று நடைமுறைப் படுத்தப்படுவில்லை. முந்தையகாலக் குருகுலக்கல்வி முறைமையில் மாணவன் ஒருவன் நன்னெறி முறைகளையும் நற்பண்புகளையும் பெற்றுக்கொண்டு தொழில்சார் கல்வியறிவையும் பெறுகிறான்.

**அறவழியில் பொருளும் இன்பமும்**

பொருளுக்குத்தான் உலகில் அதிக மதிப்பு. இதைக்கொண்டு யாரும் தவறான வழியில் செல்வம் திரட்டக்கூடாது. அறத்தின் வழியே பொருள் திரட்ட வேண்டும். பிறர் அழ, அழ பொருளைச் சேர்க்கக்கூடாது. பிறரை அழவைத்துச் சம்பாதித்தால். சம்பாதித்தவன் அழ, அழ அவன் கையை விட்டு அது போய்விடும். அறம் என்றால் தர்மம் செய்வது. அதுவும் அறத்துடன் இருக்கவேண்டும். ஒருவனுக்கு நாலணா கொடுக்கிறோம். அதைப் பெற்றுக் கொண்டவன் ஒரு கத்தரிக்கோல் வாங்கி ஊரார் பையெல்லாம் கத்தரித்துப் பணத்தைத் திருடினால் நாம் கொடுத்தும் வீணாகிவிடும். ஆகவே தர்மம் செய்வதும் தர்மத்துடன் இருக்க வேண்டும். இன்பம் கூட தாலி கட்டிய மனைவியிடம் பெறுகின்ற இன்பமாக இருக்க வேண்டும். தவறான வழியில் வருகின்ற இன்பமாக இருக்கக் கூடாது.

**நன்மையும் தீமையும்**

போகப்போக விரிவது நன்மைக்குச் செல்லும் பாதை. போகப்போகச் சுருங்குவது தீமைக்குப் போகும் பாதை நம் பாதை எது?

# நிபந்தனையுடன் கூடியபதிகம் கோளறுபதிகம்

**திரு S.R சரவணபவன் அவர்கள்**

நாட்டு நிலைமை மோசமடைந்து உயிரைப்பணயம் வைத்துப் பயப்பிராந்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள், இன்றைய சூழ்நிலையில் தினசரி பாராயணம் செய்யக்கூடிய பதிகம் இது. திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் இப்பதிகத்தைப் பாடி எமக்குத் தந்த சூழ்நிலையும் இன்றைய சூழ்நிலையும் ஓரளவிற்கு ஒன்றுபட்டதாக உள்ளது.

திருமறைக்காட்டில் எழுந்தருளிய சுவாமிகளை மதுரைக்கு எழுந்தருளச்செய்து, சைவசமயத்தைத் தாபிக்க நோக்கம் கொண்டு வருகை தருமாறு அழைத்தனர். அதனை ஏற்று அவர்களின் நோக்கத்தை அறிந்து வேதாரணியம் வந்துசேர்ந்து அங்கிருந்து பாண்டி நாட்டிற்குப் புறப்படத் தயாராக இருந்தார். அந்த நேரத்தில் அப்பர்சுவாமிகள் அங்குவந்து "சுவாமி, நீரோ சிறு பாலராவீர் அங்குள்ள சமணர்களோ கொடியவர்கள். வயதேறிய எனக்கு அந்தச் சமணர்கள் விளைவித்த துன்பங்களை நான் அனுபவப்பட்டுள்ளேன். ஆதலால் பாண்டிநாட்டிற்குச் செல்லுதல் புத்தியன்று" என்று அன்பு ததும்பக்கூறினார். அப்போது ஞானசம்பந்த சுவாமிகள் "வேயுறு தோளிபங்கன்" என்று தொடங்கும் இந்தக் கோளாறு திருப்பதிகத்தைப் பாடி விடைபெற்றுச் சென்றார்.

இப்பதிகம் ஒரு அற்புதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கவேண்டும். 8வரிகள் கொண்ட இப்பாடல்களில் முதல் மூன்று வரிகளிலும் சிவபெருமானுடைய அழகிய தோற்றம் விபரிக்கப்படுவதைப் பார்க்கலாம் சிவபெருமானின் தோற்றம், உமாதேவியாரின் தோற்றம், அவர்கள் எழுந்தருளியிருக்கும் வாகனம் அவர்கள் அணிந்துள்ளமாலை அவருடைய முடியிலிருந்து கங்கைநதி பாயும் அழகு, என்று இப்படியாகச் சிவபெருமானின் அழகிய தோற்றத்தைக் கற்பனை செய்யக் கூடிய விதத்தில் விபரிக்கிறார். நான்காவது வரிதான் மிகவும் முக்கியமானது கவனிக்கத்தக்கது. "என் உளமே புகுந்த அதனால்" என்று ஒவ்வொரு பாடலிலும் வலியுறுத்துவதை அவதானிக்க வேண்டும். மேலே மூன்றுவரிகளிலும் விபரிக்கப்பட்ட சிவபெருமானின் உருவத்தை "என் உளமே புகுந்த அதனால்" தான் அடுத்துவரும் இவ்விரண்டுவரிகளிலும் கூறப்படும் ஆபத்துக்கள் வாராமற்காக்கப்படும். முதலாவது பாடலில் நவக்கிரகங்களும் நன்மைசெய்யுமென்றும் இரண்டாவது பாடலில் சில இலக்கங்களைக்கூறி அந்த இலக்கங்களையுடைய நட்சத்திரங்கள் சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்டனவாயினும் இப்பாடலைப் படித்தால் நன்மைசெய்யும் எனவும் இப்படி ஏனைய பாடல்களில் யமனும், அரக்கரும், இடியும், மின்னலும், நோயும் பகையும் எல்லாம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே என்று நான்கு தரம் திருப்பித்திருப்பி ஒவ்வொரு பாடலிலும் உறுதிகூறி அடியார்களாகிய எமக்கு மிகவும் நல்லன என உறுதி கூறி முடித்துள்ளார்.

ஆகவே கோளறுபதிகத்தைப் பாடினால் தீமையெல்லாம் அகலும் என்று அதனுடைய கருத்திற் கவனம் செலுத்தாமற் பண்ணிசையிலும் சங்கீத ஆலாபரணங்களிலும் வீணேவிரயம் செய்வது கூடாது. கருத்தே காரியமாகப் பாடவேண்டும். கருத்து நினையாது பாடும் பாட்டு வெறும் சொற்குவியலே. பாடும் போது சிபெருமானின் உருவம் மனத்திற் பதியவேண்டும். பாடல்களிற் சொல்லப்பட்ட சிவபெருமானின் உருவம் மனத்திரையில் தோன்றி அதனைப்பார்த்தபடி படிக்கவேண்டும். இதுதான் இந்தப்பாடலில் கூறப்பட்ட நிபந்தனை "என் உளமே புகுந்ததா?" என்பதை நாம் திடப்படுத்திக் கொண்டால்தான் இப்பதிகம் உரிய பாதுகாப்பைத் தரும்.

கடைசிப்பாடலில் திருஞானசம்பந்தா் தனது தகைமையைத் தெளிவாகக் கூறியமை கவனிக்கத் தக்கது.

“மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே!”

“மறைஞான முனிவனாகிய நான் கோள்களும் நாள்களும் அடியவரை வந்து துன்புறுத்தாத வண்ணம் கூறியுள்ளேன். இந்தப் பதிகத்தை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர். இது எனது கட்டளை.”

கோள்களுக்கும் நாள்களுக்கும் கட்டளை இடக்கூடிய தகுதி திருஞானசம்பந்தருக்கு இருந்துள்ளது. உலகமாதா தன்புத்திரன் என்று உரிமைபாராட்டிப் பால்கொடுக்க, உலகநாதன் பொற்றாளமும் முத்துச் சிவிகையும் கொடுத்துத் தன்புத்திரன் என்று உலகிற்கு வெளிப்படுத்துகிறார்.

அப்படிப்பட்ட தகுதிவாய்ந்த இறைபுத்திரா் ஞானசம்பந்தா் அவா் ஆபத்து வேளைகளிலே படிக்க எமக்குத் தந்த பதிகத்தைக் கருத்து நினைந்து ஓதி உய்வோமாக.

**ஞான ஒளி**

உலகிலுள்ள பொருட்களை நெருப்பில் சுட்டால், சங்கைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களும் கருமையாகி விடுகின்றன. வெள்ளைத் துணியை, வெள்ளைக் கடிதத்தை நெருப்பில் போட்டால் கரியாகி விடுகின்றன. கரிய சாணத்தின் உருண்டையை நெருப்பில் போட்டால் அது வெண்மை ஆகின்றது. கருமை வெண்மையாக மாறிய திருநீறு உள்ளக் கருமையை மாற்றி ஞான ஒளியைத் தரும் தெய்வத்தன்மை வாய்ந்தது.

# பகவான் ஸ்ரீரமண மகரிஷி

## திரு ம.க. ஸ்ரீதரன் அவர்கள்

பெரும்பாலான மானுடர்கள் வாழ்க்கையின் இலட்சியத்தை நோக்கிப் படிப்படியாக மிகுந்த சிரத்தையுடன் பிரயாசையுடனும் பயணிக்கின்றார்கள். ஆனால் விதிவிலக்காக வெகுசிலரோ எவ்வித தடங்கலுமின்றி விர்ரெனப்பறந்து சகல ஜீவராசிகளின் இருப்பிடமாகிய பரம் பொருளை அடையப் பிறவி எடுக்கின்றார்கள். அத்தகைய அவதார புருஷர் தோன்றும் பொழுது பொதுவாக மானுடவர்க்கமே மனநிறவு பெறுகின்றது. ஒரு அவதார புருஷருக்கு ஈடாக எவராலும் ஆன்மீக முன்னேற்றம் பெறமுடியாது.

பகவான் ஸ்ரீரமணமகரிஷியின் வாழ்நாளில் திருவண்ணாமாலை சென்று வந்த எண்ணிலடங்காத மக்களின் அனுபவமும் இதுவே ஆகும். இவர் மானுட வர்க்கம் எப்படி வாழவேண்டுமென வாழ்ந்து காட்டிய ஒருமகான். இப்படிப் பட்டவர்கள் இவ்வுலகில் தோன்றுவது மிக அபூர்வமே. இத்தகைய அவதார புருஷர்களின் எழுந்தருளுகையால் மானுடசமுதாயம் அனைத்திலும் நலம் பெற்று ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கு கின்றது.

மதுரையிலுள்ள திருச்சுழி என்னும் சிற்றூரில் 1879ஆம் ஆண்டு மார்கழி 30ஆம் திகதி சுந்தரம்ஐயர் எனப்பெயர் கொண்ட வழக்குரைஞருக்கும் அவரது மனையாளான அழகம்மாளுக்கும் ஆருத்தராதரிசனநாளிலே ஒரு மகன் பிறந்தார். அவருக்கு வேங்கடராமன் என நாமஞ் சூட்டினர். அவரது பெற்றோர்கள் மிகவும் தெய்வசிந்தனை உடையவர்கள் ஆதலால் அப்பிள்ளையும் அதே சூழலில் வளரத்தொடங்கியது. திடீரென அவர்களின் வாழ்வில் ஒரு துக்ககரமான சம்பவம் ஏற்பட்டது. சுந்தரம்ஐயர் மரணமானதும் அழகம்மாள் வேங்கடராமனையும் அவருடைய மூத்தசகோதரரையும் மதுரையிலுள்ள மாமனார் வீட்டில் தங்கும்படி அனுப்பினார். மாமனாராகிய நாகசாமியே அவர்களை கண்ணுங் கருத்துமாக நற்குணங்களைப் பழக்கி மிகவும் சிறந்த முறையில் பராமரித்து வந்தார். மதுரையில் வேங்கடராமனைப் பாடசாலையில் சேர்த்தார். ஆனால் அவருக்குப் படிப்பில் நாட்டம் கொள்ளவில்லை. சகமாணவர்களின் குறும்புத்தனத்திற்கும் வேங்கடராமன் அகப்படவேண்டி நேர்ந்தது.

தன் பதினாறாவது வயதில் தான் அருணாசலம் என்ற பெயரைத் தற்செயலாக வேங்கடராமன் கேள்விப்பட்டார். ஒரு நாள் முதிய உறவினரொருவர் மதுரையில் அவரிருந்த வீட்டிற்கு வந்திருந்தார் நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்களெனச் சிறுவன் கேட்க அவர் "அருணாசலத்திலிருந்து" என்றார். அத்துடன் திருவண்ணாமலை தான் அருணாசலம் என்றார் உறவினர். இச்சம்பவத்தையடுத்துச் சிறுவனின் மனத்தில் ஆன்மிகநாட்டம் நிலைகொள்ளத் தொடங்கியது.

அவரது பதினேழாவது வயதில் ஒருநாள் மதுரையில் தனது சிற்றப்பாவின் வீட்டின் மாடியில் இருக்கும்பொழுது திடீரென்று மரணபயம் அவரைக்கவ்வியது. தான் சாகப்போவதாக உணர்ந்தார். மாறாக அந்நிலையில் தான் செய்யவேண்டியது என்ன என அமைதியாக யோசித்தார். சாவு வந்துவிட்டது. சாவு என்றால் என்ன? எனத் தீர்மானித்து உடனே தரையில் நீட்டிப் படுத்தார். மூச்சை அடக்கி உதட்டை இறுக மூடிக்கொண்டு சவம்போலக் கிடந்தார். ஈற்றில் இவ்வுடல் வேறு, "நான்" வேறு. சரீரத்தைக் கடந்த இந்த உணர்வைச் சாவு தீண்டாது. அழிவற்ற ஆத்மாவே "நான்" எனது இதயத்தில் அருணாசலர் இருக்கும்பொழுது ஏன் நான் இந்த வாழ்க்கை வாழவேண்டுமென எண்ணங் கொண்டு திருவண்ணாமலைக்கு எப்படிப் போகலாம் என்பதை அறிந்து பிரயாணத்தைத் தொடங்கினார். 1896ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29இல் அருணாசலத்திற்குப் புறப்பட்டார். அவர் அங்கே அங்கவஸ்திரங்களை எல்லாம் வீசியெறிந்து விட்டுத், தலையை முழுச்சவரம்

செய்து கொண்டு கௌபீனத்துடன் மட்டும் இருந்தார். அக்கோவிலிலுள்ள பல இடங்களிலும் அவர் மாறிமாறிச் சமாதி நிலையிலிருந்தார்.
அவரைச் சுற்றி எறும்பு, புழு, பூச்சிகள் அவரது உடலை அரித்துத் தின்ன ஆரம்பித்துங் கூட அவர் அதை உணரவில்லை. அவர் வாய்திறந்து ஒருவருடனும் பேசவுமில்லை. அன்னையார் நாகசாமியுடன் திருவண்ணாமலை சென்று தன்னுடன் திரும்பி வரும் படி மன்றாடினார். ஆனால் அவர் அதைச் செவிமடுக்கவில்லை. இவர் அங்கிருந்து பல முனிவர்களுக்கு ஆன்மீக போதனையை விளக்கியருளினார். அவரில் கணபதி சாஸ்திரியும் ஒருவர். இவர் பின் கணபதி முனி என அழைக்கப்பட்டார். ரமணர் அவருக்கு "நான், நான் என்பது எங்கிருந்து புறப்பட்டதோ அதனைக் கவனித்தால் மனம் ஒடுங்கும். அதுவே தபஸ். ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணினால் அந்தச்சப்தம் எங்கிருந்து புறப்படுகிறது என்று கவனித்தால் மனம் அங்கே ஒடுங்கி விடுகின்றது என்று மிகவும் விளக்கமாகத் திருவாய் மலர்ந்தார். இதைக் கேள்வியுற்று அதிச்சியடைந்த கணபதிமுனி அப்பாலகனுக்குப் "பகவான் ஸ்ரீரமணமகரிஷி" என நாமம் இட்டார். 1922ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி பகுளநவமி தினத்தில் அன்னை அழகம்மாள் முக்தியடைந்தார். உடல் மலையின் அடிவாரத்திற்குக் கொண்டுசென்று அங்கு அடக்கம் செய்யப்பட்டது. தாயின் இறுதிச் சடங்குகளை ரமணர் அமைதியாக நின்று பார்த்தவண்ணமிருந்தார். ரமணரின் முதல் மேலைநாட்டுப் பக்தர் எ.ஃப். எச். ஹம்ப்ரீஸ் என்பவர். இவ் ஆங்கிலேயர் ரமணரால் வெகுவாகக் கவரப்பட்டார். இவரையடுத்து மகரிஷியைக் காணவருவோர் தொகை நாளுக்கு நாள் பெருகிற்று. சிலர் சில நாட்களும் பலர் பல நாட்களும் அங்கு தங்கிச் சென்றனர். ஆச்சிரமமும் விரிவடைந்தது. தாமே ஆச்சிரமத்தின் பெரும்பாலான வேலைகளைக் அங்கு தங்கிச் சென்றனர். ஆச்சிரமமும் விரிவடைந்தது. தாமே ஆச்சிரமத்தின் பெரும்பாலன வேலைகளைக் கவனித்து வந்தார்.

ரமணர் திருவண்ணாமலை வந்து தங்கி ஐம்பது ஆண்டு நிறைவாகவே பொன்விழா 1946இல் கொண்டாடப்பட்டது. அடுத்தவருடம் அவரது உடல் மிகவும் நலிவுற்றது. 1948 ஆம் ஆண்டு இறுதியில் அவரது இடது முழங்கைக்குக் கீழே ஒரு சிறு கட்டி தோன்றியது கட்டி வளர்வதைக் கண்ட ஆச்சிர மருத்துவர் அதைவெட்டி எடுத்தும், அக்கட்டி ஒரு மாதத்திற்குள் திரும்பவும் தோன்றியது. பல பரிசோதனைகளுக்குப் பின்னர் டாக்டர்கள் அதனைப் புற்றுநோய்க்கட்டி எனக் கண்டறிந்தனர். ஆனால் ரமணரோ இதைப் பற்றிப் பெரிதாய் அலட்டிக்கொள்ளவில்லை. அவர் தன்னைக் காணவந்த பக்தர்களுக்கு "உங்கள் பகவான் இந்த உடம்பல்லர்" என்ற உண்மையை அறிவுறுத்தினார்.

1950ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி அவரது இறுதிநாள் அவருக்கு முடிவு நெருங்கிவிட்டதென. ஆச்சிரமத்திலுள்ள அனைவருக்கும் தெரிந்து அவர்கள் அங்கேயிருந்து "அருணாசல சிவ, அருணாசல சிவ" என்ற ரமணர் இயற்றிய அஷரமணமாலைப் பாடலைத் திரும்பத் திரும்ப ஓதினர். அன்றிவு 8.47க்கு அவரது மூச்சு அடங்கியது.

ரமணர் இயற்றிய நூல்களில் "உள்ளது நாற்பது" ம் "உபதேச சார" மும் முக்கியமானவை ஆகும்.

ரமண மகரிஷி போன்று தூய உணர்வில் ஒன்றிவிட்டவர்களுக்கு உடலும், உலகமும், இருப்பதும், இல்லாமலிருப்பதும் ஒன்றே. தாழ்நிலையிலுள்ளவர்களுக்கும் நம்பிக்கை ஊட்டி நம் அனைவரையும் சோர்வுச் சக்தியிலிருந்து கைதூக்கிவிடுவதற்குப் பகவான் ரமணர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

## பிறவிப் பெருங்கடல்

ஒருவன் ஆயிரம் பவுண்களைச் சேர்த்து வைத்திருந்தான். அழகிய இளம் மனைவி, ஐந்து வயதுப் பாலகன் இவர்களுடன் இனிது வாழ்ந்தான். மழை பொழிந்து வெள்ளம் வந்து அவன் வாழ்ந்த ஊரே வெள்ளத்தில் மூழ்கி விட்டது. அவன் பவுண் மூட்டையைத் தலையிலும் மனைவியை இடது தோளிலும், மகனை வலது தோளிலும் சுமந்து கொண்டு வெள்ளத்தில் நீந்தலானான்.

மேலும் வெள்ளம் வந்து விட்டது. மூன்று சுமைகளும் அவனை அழுத்தின. ஏதாவது ஒன்றைவிட்டால் சுமை குறையும். நீந்தி அக்கரை சேரலாம் என்ற அக்கறை வந்தது. பொன் மூட்டையை விட்டான். சிறிது கனம் குறைந்து நீந்தி விட்டான்.

மேலும் வெள்ளம் வந்து விட்டது. இப்போது இன்னும் ஒன்றை விட்டாலன்றி நீந்த முடியாது என எண்ணினான். மனைவியை விடுவதா? மகனை விடுவதா? என்று சிந்தித்தான். மனைவியைத் தன் விருப்பத்தால் மணந்து கொள்ளலாம். குழந்தை தெய்வங் கொடுத்தாலன்றிக் கிடைக்காது. ஆதலால் மனைவியை விட்டு விட்டான். சுமை நீங்கிக் கரை சேர்ந்தான்.

வெள்ளம் என்பது பிறவிப்பெருங்கடல். பொன்னாசை, மனைவியாசை, மக்களாசை என்ற மூவாசையும் ஒன்றொன்றாக விட்டபின் முத்திக்கரை சேர்ந்தான். அநுபூதிக்கு ஆசைகள் தடை. ஆதலால், ஆசைகளை விட்டு முருகன் அநுபூதியைப் பெற வேண்டும்.

## 2005ஆம் ஆண்டு உற்சவம் (05.08.2005)தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| ம. ஸ்ரீகாந் | அச்சுவேலி தெற்கு | 1000.00 |
| சபாரட்ணம் வள்ளியம்மை | தெல்லிப்பளை | 1500.00 |
| S.கணேசலிங்கம் | கொழும்பு | 5000.00 |
| பசுபதி சுகந்தன் | தம்பசெட்டி | 900.00 |
| ஸ்ரீஅபிலஷா | பிரான்ஸ் | 3000.00 |
| S.பத்மநாதன் மக்கள்வங்கி பிராந்தியக் காரியாலயம் | யாழ்ப்பாணம் | 5000.00 |
| இராசேஸ்வரி ராகுலன் | சுண்ணாகம் | 1000.00 |
| மாணிக்கம் நடராஜா கேணியடிதெற்கு | குப்பிளான் | 3000.00 |
| க. சிவராஜா | அவுஸ்திரேலியா | 2000.00 |
| V.செந்திநாத் | திக்கம் | 1மூடை அரிசி |
| திருமதி சந்திரபவானி பரமசாமி | தெகிவளை | 2000.00 |
| T.பாலசுப்பிரமணியம் ரஞ்சன் றோட் | கொழும்பு | 1000.00 |
| மு. சிவலிங்கம் G.S | இணுவில் | 1000.00 |
| இ. தங்கவேல் | வல்வெட்டித்துறை | 2000.00 |
| சி. மாணிக்கவாசகர் மூலம் சிற்றம்பலம் நல்லம்மா | மந்துவில் | 25000.00 |
| சதாசிவம் நினைவாக அந்திரான் | கரவெட்டி | 1000.00 |
| K.V.செல்லையா அந்திரான் | கரவெட்டி | 1000.00 |
| செ. உருத்திராபதி | வல்வெட்டி | 3000.00 |
| க. ஞானச்சந்திரன் நாகலிங்கம் வீதி | தாவடி | 2மூடைஅரிசி, 1000.00 |
| கிறீன்பலஸ் புடைவையகம் | திருநெல்வேலி | 2மூடை அரிசி, 20K உடைத்த உழுந்து |

| | | |
|---|---|---|
| நிர்மலம் நகுலேந்திரன் | அமெரிக்கா | 115அமெரிக்க டொலர் |
| ஸ்ரீநதியா நகைமாடம் ஸ்ரான்லி வீதி | யாழ்ப்பாணம் | 2000.00 |
| க.மாணிக்கவாசகம் | குரும்பசெட்டி | 1000.00 |
| A. மகாலிங்கம் | வத்தனை | 1000.00 |
| சி. கனகலிங்கம் மகேந்திரன்லட்சுமிகிரஷ்ர் | கரணவாய்தெற்கு | 5000.00 |
| சி. பஞ்சலிங்கம் | உரும்பராய் | 1000.00 |
| நா. சந்திரசேகரம் | அல்வாய் | 1000.00 |
| நா. செல்வமனோகரன் தோப்பு | அச்சுவேலி | 2000.00 |
| சத்தியபாலன் ரூபபாலன் | தெல்லிப்பளை | 2000.00 |
| அ. செல்வராஜன் குடும்பம் | தெல்லிப்பளை | 1000.00 |
| A. சுரேந்திரன் குடும்பம் | உடுப்பிட்டி | 2மூடை அரிசி |
| செல்வி இராமலிங்கம் சகோதரிகள் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஐ. மகேஸ்வரன் துன்னாலைமத்தி | கரவெட்டி | 1000.00, 2மூடைஅரிசி |
| வெங்கடாசலம் கமலாதேவி | யாழ்ப்பாணம் | 1000.00 |
| த. செல்வராசா முருகவேள் | கரவெட்டி (கனடா) | 1000.00 |
| S. மிகிந்தலா | கரவெட்டி | 1200.00 |
| வ. கருணாநிதி | வளளாய் | 1000.00 |
| நா. வடிவேஸ்வரன் தும்பளை | பருத்தித்துறை | 1000.00 |
| ம. மகேந்திரன் | ஊரெழு | 3000.00 |
| சா. தனுஷன் | ஊரெழு | 1000.00 |
| க. தாரணி தோப்பு | அச்சுவேலி | 1000.00 |
| அ. சுகந்தினி அல்வாய்மேற்கு | அல்வாய் | 1000.00 |
| P. கலாஜினி ஐயனார் வீதி | பருத்தித்துறை | 1500.00 |
| S. ரமேஸ்குமார் | பருத்தித்துறை | 1000.00 |
| N. கதிரவேல் சோதிமாளிகை | திருநெல்வேலி | 3000.00 |
| கு. டிரோஷன் | மானிப்பாய் | 5000.00 |
| தி. குகன் நாச்சிமார் கோவிலடி | யாழ்ப்பாணம் | 4000.00 |
| சுப்பையா தம்பிராசா தோப்பு | அச்சுவேலி | 10,000.00 |
| ந. திரவியம் புலோலி | பருத்தித்துறை | 1000.00 |
| ச. யோகேஸ்வரன் | கைதடி | 5000.00 |
| சின்னையா கிருஷ்ணசாமி | மட்டுவில் | 2000.00 |
| யோகநாதன் விமலாதேவி நவிண்டில் | கரணவாய் | 1000.00 |
| P. பாலசிங்கம் டக்காரோட் | யாழ்ப்பாணம் | 500.00 |
| ந. நக்கீரன் | ஊரெழு | 500.00 |
| யோ. இரத்தினசோதி தம்பசெட்டி | பருத்தித்துறை | 3000.00 |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 1000.00 |
| சி. கிருபாகரன் | அச்சுவேலி தெற்கு | 3000.00 |
| S. வில்வராசா | மலேசியா | 5000.00 |
| செல்வி நீரஜா சுந்தரலிங்கம் | நெல்லியடி | 10,000.00 |
| க. சபேஷன் | வவுனியா | 2மூடை அரிசி |
| N. சுவர்ணலிங்கம் 33வது லேன் | கொழும்பு | 6000.00 |
| செல்வி அபிராமி தங்கேஸ்வரன் | கொழும்பு | 1000.00 |
| தாட்சாயினிலவன் ஞானகுருசம்பந்தமூர்த்தி | | 30,000.00 |
| Dr.G. பவானி மகப்பேற்றுநிபுணர் | யாழ்ப்பாணம் | 10,000.00 |
| த. துதேஸ்வரன் குலானை வீதி | நவிண்டில் | 10,000.00 |
| பிருந்தா (பபி) | கோண்டாவில் கிழக்கு | 4500.00 |
| வேலாயுதம் சிவசீலன் | கோண்டாவில் கிழக்கு | 4500.00 |
| S. இராசகுமார் | மயிலிட்டி | 1000.00 |

# முன்னோர் சொன்ன கதைகள்

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

நமது சமயத்தின் தத்துவங்களையும் ஆராதனைகளையும் மற்றும் பல்வேறு விடயங்களையும் தன்னகத்தே கொண்டது வேதம். 'வித்' என்னும் அடியிலிருந்து வேதம் என்ற சொல் உருவாகியது. 'வித்' என்பதன் கருத்து அறிதல் என்பதாகும். இந்த வேதம் பற்றி நாம் நிறைய அறிந்திருக்கிறோம். எப்படி அறிந்திருக்கிறோம்.

குருடர்கள் யானை பார்த்த கதை கேள்விப்பட்டிருப்பீர்களே. ஒரு குருடனின் கைகளுக்கு யானையின் காலொன்று தட்டுப்பட்டது. அதைத் தடவிப்பார்த்தவன் "உரல் மாதிரி இருக்கிறது" என்றானாம். மற்றவன் காதைத் தடவிப்பார்த்தான் "முறம் போலிருக்கிறது" என்றானாம். இப்படி ஒவ்வொருவனும் தன் கையால் தொட்டுணர்ந்ததைக் கொண்டு "யானை இப்படியிருக்கும்" என நினைத்துக்கொண்டான்.

இவர்களைப் போலக்கூட நாம் வேதத்தைப் பற்றி அறிந்துகொள்ளவில்லை. அவர்களாவது யானையின் ஒவ்வொரு பாகத்தைத் தொட்டுப் பார்த்தார்கள். நாம் வேதத்தின் ஒரு சுலோகத்தைக்கூட அறிந்துகொள்ளாமல் வேதத்தைப் பற்றி நிறைய அறிந்து வைத்திருக்கிறோம்.

வேதத்திற்குச் சுருதி (ஷ்ருதி) என்றொரு பெயருமிருக்கிறது. 'ஷ்ரு' என்னும் அடியிலிருந்து பிறந்தது இச்சொல். இவ்வடியின் பொருள் 'கேட்டல்' என்பதாகும்.

நமது சமயம் மிகப்பழமையானது. முற்காலத்தில் எழுதிக் கற்கும் நிலை இருக்கவில்லை வாயாற் கூறக்கேட்டு மனனஞ்செய்து கற்றகாலம் அது. இவ்வாறே வேதத்தையும் கற்றனர். இதனாலேயே சுருதி என்று வேதங்கள் பெயர்பெற்றன. கூறுபவர் வியாக்கியானம் செய்வதாலும் தம் கருத்துக்களையும் கூறுவதனாலும் கிளைக்கதைகளையும் இணைப்பதனாலும் இவை வளர்ச்சிபெற்றன. வேதங்களின் பரப்பளவு, ஆழம் முதலியவை பற்றி விளக்கும் ஒரு குட்டிக்கதையை இம்முறை பார்ப்போம்.

பரத்வாஜர் என்ற மகாரிஷி சிறு வயதிலேயே குருகுலம் சென்று வேதங்களைக் கற்க ஆரம்பித்தார். அவருக்கு நூறுவயது அண்மித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவ் வேதங்களைக் கற்று முடிக்கவில்லை. அதனால் இந்திரனைத் தியானித்து தவமியற்றினார். அவரது தவத்தினால் மகிழ்வுற்ற இந்திரன் அவர் முன்தோன்றி அவரது கோரிக்கை என்னவெனக் கேட்டான். அவர் "நான் வேதங்களைக் கற்று முடியவில்லை எனக்கு மேலும் நூறுவருட வாழ்நாளை அருளவேண்டும்" என்று வேண்டினார். அவனும் ஒரு முறுவலுடன் அந்த வரத்தை நல்கி மறைந்தான்.

பரத்வாஜர் கற்றுகொண்டிருக்கிறார். இருநூறாவது வயது அண்மிக்கத் தொடங்கியது. "இன்னும் கற்கவேண்டியது அதிகளவு உள்ளதே, மீண்டும் தவமிருப்போம்" எனத் தீர்மானித்து, இந்திரனை நோக்கித் தவம் புரிந்தார். இம்முறையும் அவரது வேண்டுதலை ஏற்று ஒரு சிரிப்புடன் மேலும் நூறுவருடங்கள் வாழ அவருக்கு வரமளித்து இந்திரன் சென்றான்.

அவருக்கு முந்நூறாவது வயது நெருங்கத் தொடங்கியது. வேதங்களைக் கற்று முடித்ததாகக் காணோம். ஆனால் இம்முறை இந்திரன் பரத்வாஜ மகரிஷியை முந்திக் கொண்டான். அவர் தவமியற்ற ஆரம்பிக்கு முன்னரே இந்திரன் அவரெதிரே காட்சி கொடுத்து மூன்று மந்திரங்களைக் கூறி மலைகளைத் தோற்றுவித்தான். "இந்த மூன்று மலைகளும் வேதங்கள்" என அவருக்குக் காட்டினான்.

“அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. “இவ்வளவும் எனக்குக் கிடைத்துவிட்டதா பிரபு?” என ஆவலுடன் கேட்டார்.

இந்திரன் மறுதலித்துத் தலையசைத்துச் சிரித்தான். “உமக்குக் கிட்டியதை இதோ பாரும்” எனக்கூறி மூன்று மலைகளிலிருந்தும் ஒவ்வொரு பிடியாக மூன்று பிடிகள் அள்ளிப் போட்டான்.

“முந்நூறு வருடங்கள் வாழ்ந்து நீர் வேதங்களில் கற்றுணர்ந்தது இவ்வளவுந் தான். மிகுதியைக் கற்க எவ்வளவு காலந் தேவைப்படும்?” என இந்திரன் கேட்டான். மூன்று பிடி மண்ணையும் மூன்று மலைகளையும் மாறிமாறிப் பார்த்தவாறு திகைத்து நின்றார் பரத்வாஜர்.

வேதங்களின் பரப்பளவையும் அவற்றைக் கற்றறிந்துவிட்டதாகக் கருதுவோரின் தவறான எண்ணத்தையும் விளக்குவதாக இக்கதை அமைந்துள்ளது. இச்சிறிய கதை எமது சமய தத்துவங்களின் பெருமையையும் சிறப்பாக விளக்கியுள்ளது.

**கையிலாயத்தில் தொடங்கி கையிலாயத்தில் முடிவது**

உலகெல்லாம் உவந்து ஏத்தும் கந்தபுராணம் சிவநூல், இராமாயணம், அன்புநூல், மகாபாரதம் அறநூல், சிலப்பதிகாரம் விதிநூல், சிந்தாமணி இன்பநூல், பெரியபுராணம். பல பிறவிகளால் செய்த மாபெரும் புண்ணியம் துணை செய்தால் மட்டுமே பெரியபுராணத்தைப் படிக்கும் பெருவாய்ப்பு ஒருவனுக்கு கிடைக்கும்.

பெரியபுராணம் படிக்குந்தோறும் மனித இனத்தை உயர்த்தி உய்விப்பது, பிறவியாகிய பெரிய கடலுக்குத் தோணி, மனத்தளர்ச்சிக்கு ஆணி, சிவகதிக்கு ஏணி, நாயன்மார்களின் சரித்திரத்தைச் சொல்லும் இப் பெரியபுராணமானது கையிலாயத்தில் தொடங்கி கையிலாயத்தில் முடிவது நாமெல்லாம் மண்ணிலே தொடங்கி மண்ணிலே முடிகிறோமே!

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்....

### செல்வி தி. வரதவாணி அவர்கள்

அருட்கவி ஐயாவின் புண்ணியதரிசனத்தாலும் அவரது தெய்வீகப் பெருவாழ்வினது கிட்டிய தொடர்பாலும், அவதார புருஷரான ஐயாவின் தெய்வீகப் பெருவாழ்வைப் பற்றி அறிவதனுடன் தெய்வ, மனித இயல்புகளின் சங்கமமாக நாங்கள் அருட்கவி ஐயாவைக் கண்டிருந்ததால்தான் முந்தைய யுகங்களில் தோன்றிய அவதார புருஷர்களின் வாழ்க்கையிலும் இந்த தெய்வ, மனித என்னும் இரண்டு நிலைகளும் இணைந்து காணப்பட்டிக்கும் என்பதை எங்களால் ஊகிக்க முடிந்தது.

அருட்கவி ஐயா அவர்கள் உலகியல் காரியங்கள் ஒவ்வொன்றிலும் ஈடுபாட்டுடன் செயற்படுபவராயினும் அவரது உலகியல் செயன்முறை தாமரையில் தண்ணீர் போன்றதாகவே அமைந்து இருக்கின்றது எனலாம்.

"செயலில் செயலின்மையும் செயலின்மையில் செயலையும்
காண்கின்றவன் எவனோ – அவனே யோகி"

என்று பார்த்தசாரதி புகன்ற பகவத்கீதை செப்புவதற்கிணங்க ஐயா அவர்களது ஒவ்வொரு செயலிலும் செயலின்மை அமைந்திருப்பதனைக் காணலாம். குறிக்கோள் உடைமையே உயரியோர் மாண்பு என்பதற்கமைய குறிக்கோள் உடைய தெய்வீக ஆத்மாவான ஐயாவின் குறிக்கோள் என்னும் முழு மூச்சும் எதில் தங்கி இருக்கின்றது என்றால் இறை சிந்தனை என்னும் ஞான ஒளியில் ஆகும்.

இவருக்கும் இறைவனுக்கும் இடையேயான பந்தம் இன்று நேற்று உருவான பந்தம் அன்று. அது காலத்தால் வரையறுத்துக் கூறமுடியாததாகும் இறை சிந்தனை உடையோராயினும் இறை ஆசி, இறை காட்சி பெறுதல் என்பது எளிதான காரியம் அன்று அத்தகைய கிடைத்தற்கரிய இறையருட் காட்சியையே பெற்ற பெரும் பேராளர் அருட்கவி ஐயா அவர்கள்.

ஐயாவின் பிறப்பு கதிர்காம வேலவனது அருள் என்பதும் ஐந்து மாதக் குழந்தையில் இறக்கும் தறுவாயில் அம்பிகை அருள்பெற்று உயிர்பெற்ற விடயமும் பற்றி முன்பு நோக்கியிருந்தோம் இத்தகு அற்புதம் மிக்க ஓர் சம்பவமே அம்பிகைக்கு ஐயா அவர்கள் தாமரைப் பூத்தேடிய சம்பவமும்.

1959 புரட்டாதி மாதம் அன்று நவசக்திக்கு உகந்த நவராத்திரி காலத்தின் நான்காம் நாள் விடியற்காலை விழித்தெழுந்தும் தம் தின வழிபாடாற்றிய ஐயாவுக்கு மனம் திருப்திப்பட்டதாய் இருக்க வில்லை. தாம் வணங்கும் அம்பாளின் கையில் ஒரு தாமரை மலர் அளிக்க வேண்டும் என்றொரு விருப்புருவாகியது. தனக்குத் தெரிந்த தாமரைக் குளங்கள் யாவற்றிற்கும் சென்று பார்த்தார். எங்கும் தாமரைப்பூ கிடைக்கவில்லை. தேடித்தேடி பறாளை முருகன் கோவில் வரை சென்று விட்டார். மனம் தளராது எப்படியும் முருகன் எனக்குத் தாமரைப்பூ தருவான் என நினைத்தவராய் பறாளை முருகன் கோயில் தாமரைத் தடாகத்தைப் பார்த்தார். என்ன அதிசயம் அவர் மனம் குளிரும் வகையில் அங்கு இரண்டு தாமரை மலர்கள் இருப்பதைக் கண்டார். வாயார முருகா நன்றி எனக் கூறியவாறு மலரை நோக்கி விறுவிறுவென ஓட ஆரம்பித்தார். குள வாசலில் காலை வைத்ததும் தடித்த குரல் ஒன்று ஏய் குளத்தில் இறங்காதே நில் என்றது. குரல்கேட்ட திசையில் ஓர் முதியவர் எத்தனை தரம் சொல்வது ஏன் இதில் நிற்கிறாய்? போ என்று ஏசித்துரத்தினார் மனங்கலங்கிய ஐயா அவர்கள் கோயில் முன் வாசலை அடைந்தார் பூசை முடிந்து சுவாமியின் கதவுகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. அங்கு ஒருவரையும் காணவில்லை. ஆலயத்துட்புகும் வாசல் மாத்திரம் திறந்து இருந்தது. ஆலயத்துள் பிரவேசித்த ஐயாவுக்கு மனம் குமுறியது உன் அன்னைக்குத் தானே பூவுக்கு அலைகிறேன். உன்னிடம் இருக்கிறது. ஏன் தர மறுக்கிறாய் என நினைத்தபடி,

“கன்னியாய் மாகைப் பதியுறை அன்னைக் கொருகமலம்
தன்னமாய் யான்கேட்டும் தந்தில ரேசிவ சண்முகனே
நின்னதாய் ஒன்றைத் தரவருவாய் நெடுவேலழகா
பன்னிரு கண்ணினாற் பாராய் பாலகனே”

என்று பாடினார். பாடல் முடிந்ததும் பூட்டப்பட்டிருந்த மூலஸ்தானக் கதவைத் திறந்தபடி உள்ளிருந்து நன்கு சிவந்த நிறத்தவரான அந்தணர் வெளிவந்தார். அருட்கவி ஐயாவைப் பார்த்து ஏன் நிற்கிறீர்? என்ன வேண்டும்? என்றார். ஐயாவும் அன்னைக்கு தாமரைப்பூ தேடி வந்தவிடயத்தைக் கூறினார். அந்தணச் சிவாச்சாரியார் வெளியே பார்த்து ஒருவரைக் கூப்பிட்டார் வெளியே இருந்து வந்தவரிடம் அந்தத் தாமரைப்பூ இண்டையும் பறித்து வரும்படி உத்தரவிட்டார். இரண்டு மலர்களும் பறிக்கப்பட்டு அந்தணச்சிவாச்சாரியாரால் ஐயாவின் கையில் அளிக்கப்பட்டன.

இரு மலரையும் பெற்ற அருட்கவி அவர்கள் பூசகரிடம் ஒரு மலரைக் கொடுத்து அன்னைக்கு ஒன்று போதும். இந்த மலரை முருகனுக்கு வையுங்கள் என்று கூற பூசகரோ வேண்டாம் நீர் இரு மலரையும் கொண்டு செல்லும் என்று வற்புறுத்தினார். விநாசித்தம்பி ஐயாவும் பிடிவாதமாக முருகனுக்கு ஒன்றை வையுங்கள் என்று வேண்டி நின்றார். இறுதியாக அவ்வந்தணரும் ஒப்புக்கொண்டு “உமக்கு முருகனில் இவ்வளவு தடித்த பக்தியா” சரி பெரியமலரை அம்மாவுக்குக் கொடும் சிறிய மலரை மகனுக்குத் தாரும் என்று கூறி அதில் சிறிய பூவை சிரித்தபடியே வாங்கிக் கொண்டார். எண்ணிய எண்ணம் கைகூடச் செய்த அந்தணருக்கு அன்புடன் நன்றி கூறி விடைபெற்றார் ஐயா அவர்கள்.

விடைபெற்றவர் ஒருமுறை மூலஸ்தானத்தையும் அவ் அந்தணரையும் பார்க்க வேண்டும் என்ற உந்துதலால் திரும்பிப் பார்த்தார். என்ன அதிசயம் அங்கு ஒருவரையும் காணவில்லை. மூலஸ்தானம் பூட்டப்பட்டிருந்தது. முருகனின் திருவிளையாடலை உணர்ந்து கொண்டார். வந்த அந்தணர் சாதாரண ஆலயப் பூசகர் அல்ல. ஆறுமுகனான முருகப்பெருமான் என்பதனை அப்பொழுதுதான் புரிந்து கொண்டார்.

பறாளை முருகப்பெருமானுக்கு நன்றி கலந்த வணக்கத்தையும் கூறி அம்பிகையின் கையில் மகன் பறித்துத் தந்த தாமரை மலரை ஒப்புவித்தார் ஐயா அவர்கள்.

இவ்வாறாக விநாசித்தம்பி ஐயா அவர்கள் இறைவனிடம் நேரிய தொடர்பு கொண்டு வாழ்வை நடாத்திவந்தவர். தெய்வீகமும் அவரும் ஒன்றித்த பிறவிகள் அவர் விரும்பியதை இறைவனே தானே முன்வந்து அருள்கிறான் என்றால் அவரது பக்தியின் சக்தி எத்தகையது என்பதும், ஐயா அவர்களுக்கும் இறைசக்திக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனையும் புரிந்துகெள்ள முடிகிறது. இத்தகு தெய்வீக சிறப்புமிக்க அவதார புருஷர் அருட்கவி ஐயா அவர்கள்.

## ஆலயத்தில் வழிபடும் முறை

மாநில ஆளுநரைக்காண அவருடைய அரச பவனத்துக்குப் போகும் ஒருவன் வாசலில் நிற்கும் பணியாளர்களையா அதிகம் மரியாதை செலுத்தி வணங்குவான்? ஆளுனருக்குத்தானே முதல் வணக்கம் செலுத்துவான். அதுபோல் ஆலயத்தில் இறைவனுக்குத்தான் முதல் வணக்கம் செலுத்த வேண்டும். வழிபாடு முடிந்த பின் நவக்கிரகங்களை வலம் வந்து கும்பிட வேண்டும். இறைவனையன்றி வேறு மற்றவர்கட்கு கோயிலில் அஷ்டாங்க வணக்கம் செலுத்தக் கூடாது.

ஆலயத்தில் சூரிய சந்திர வடிவங்களை அமைத்து பண்டைக்காலத்தில் வழிபட்டு வந்தார்கள். ஆலயங்களில் நவக்கிரக பிரதிஷ்டை 200ஆண்டுகட்குப் பின்னரே தோன்றியது ஆலய வழிபாடு செய்வோர் இறைவனை வலம் வந்து கொடிமரத்துக்கு முன் விழுந்து கும்பிடுதல் வேண்டும்.

இறைவழிபாடு முடிந்தபின் நவக்கிரகங்களை வழிபட வேண்டும். இறைவனை வழிபடாது நவக்கிரகங்களை மட்டும் வழிபட்டால் அந்த நவக்கிரகங்களே அவர்கட்கு நலம் புரியாது தீமை புரியும்.
ஒரு வீட்டில் தலைவனை வணங்காது பணியாளனை வணங்கினால் அப்பணியாளன் நன்மையா புரிவான்? “ அங்கே என் எஜமானர் இருக்கின்றார். அவருடைய திருமுன் என்னை வணங்கலாமா?” என்பான்.
அதுபோல் இறைவனைப் புறக்கணித்துக் கோள்களை வழிபடுதலாகாது.

# சந்நிதியான்

### திரு ந. அரியரத்தினம் அவர்கள்

மருதர் கதிர்காமரைப் பின்பற்றி வெள்ளைத்துணியினால் வாயினைக் கட்டி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நித்திய பூசைகள், உற்சவகாலப் பூசைகள் மேற்கொள்ளு கின்ற பூசகர்கள் சந்நிதியானது திருவருளிற்கு பாத்திரமானவர்களாவர். அவர்கள் சாதாரண காலங்களில் சராசரி மனிதர்களாக எமக்குத் தோற்றமளித்தாலும் சந்நிதியானுக்கு பூசைக்குரிய கைங்கரியங்களை நிறைவேற்றுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் தனித்துவமான சிறப்புக்குரியவர்களாகவும் புனிதமானவர்களாகவும் இயைபாக்கம் அடைகின்றனர். முக்கியமாக நித்திய பூசைகளோ, உற்சவ காலப் பூசைகளோ முடிவடைகின்ற நிலையில் மூலஸ்தானத்திலிருந்து திருநீற்றுத் தட்டுடன் பூசகர்கள் வருகைதந்து அடியார்களுக்கு திருநீறு வழங்கும் பொழுது திருநிற்றை அந்த பூசகர் வழங்குவதுபோல எமக்குத் தோன்றினாலும் உண்மையில் சந்நிதியானே அந்த திருநீற்றை வழங்குவதாகக் கருதப்படுகிறது. அதுமட்டுமல்ல இன்றுவரை அவ்வாறான நம்பிக்கையுடனே அந்த கைங்கரியம் செயற்படுத்தப்பட்டும் வருகின்றது.

சந்நிதியில் நித்தியபூசைகளை மேற்கொள்ளுமாறு முருகப்பெருமான் மருதர் கதிர்காமரிடம் கேட்டுக்கொண்டவேளை மருதர் கதிர்காமர் அதற்கு தயக்கம்காட்டி தனக்கு அந்த தகுதி இல்லை என்பது தொடர்பாக பல கருத்துக்களை வெளிப்படுத்தியதுடன் அடியார்கள் பெருமக்களுக்கு தான் எவ்வாறு திருநீற்றை வழங்குவதென்றும் மருதர் கதிர்காமர் தனது மனக்குறையை வெளிப்படுத்தியுள்ளார் அப்பொழுது சந்நிதியான் மருதர் கதிர்காமரிடம் “திருநீற்றுத் தட்டை நீ கையில் எடு நான் அதனை அடியார்களுக்கு வழங்குகின்ற செயற்பாட்டை உனக்குள் இருந்து செயற்படுத்துவேன்” என வாக்குக்கொடுத்துள்ளதையே ஆலய வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இதனால்தான் பூசை முடிவடைந்து திருநீற்றுத்தட்டுடன் வருபவரின் உருவம் குறிப்பிட்ட பூசகராக எமக்குத் தெரிந்தாலும் உண்மையில் அந்த உருவத்திற்கு உரியவர் சந்நிதியானே எனக் கருதப்படுகிறது. மேலும் இவ்வாறு வாய் கட்டிய நிலையில் திருநீற்றுத்தட்டுடன் வருகின்ற பூசகர்கள் தீருநீற்றை அடியார்களுக்கு வழங்குகின்றபொழுது வயது வேறுபாடின்றியும் பால் வேறுபாடின்றியும் வேறு எந்த புறத்தோற்றத்தையும் நோக்காதும் மௌனமாக ஒரேவித உணர்வுடன் செயற்படுத்துவதையும் நாம் அவதானிக்க முடியும்.

இவ்வாறு திருநீறு வழங்குவது பூசகர் அல்ல. அது சந்நிதியான்தான் என்பதனை அடியார்களும் உள்ளத்தில நிலைநிறுத்தி பயபக்தியுடன் பூசகருடைய பாதங்களைத் தொட்டு வணங்கியபின்பே அவரிடமிருந்து திருநீற்றைப் பெற்றுக்கொள்கின்ற செயற்பாட்டை அடியார்கள் கடைப்பிடித்து வருவதனை நாம் இன்றும் இந்த ஆலயத்தில் விசேஷடமாகக் காணமுடியும். அதிலும் ஆலயத்திற்கு பூ எடுக்கின்ற பூக்காரர்கள், விளக்கெடுக்கின்ற சிறுமிகள் ஆலயச்சூழலில் வாழ்கின்றவர்கள் மற்றும் இந்த விளக்கத்தை நன்கு விளங்கிக்கொண்டவர்கள் எல்லோரும் மிக பயபக்தியுடன் பூசகருடைய பாதங்களைத் தொட்டு வணங்கிய பின்பே திருநீற்றை பூசகரிடமிருந்து பெற்றுக்கொள்வதை நாம் காணமுடியும்.

இதே போன்றுதான் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வருடாந்த உற்சவத்தையும் நடாத்துவதற்கு மருதர் கதிர்காமருடைய உள்ளம் விருப்பம்கொண்ட நிலையிலும் அதனைச் செயற்படுத்தி முடிக்கின்ற ஆற்றலும் அனுபவமும் தனக்கு இல்லை. என்பதனால் அதனைச் செயற்படுத்துவதற்கு தயக்கம் காட்டி நின்றார்கள். அப்பொழுது சந்நிதியான் உற்சவத்தை நடாத்துவதற்குரிய கைங்கரியங்களைச் செய்யுமாறும் அதனைச் செயற்படுத்துவதற்கு எல்லா வகையிலும் மருதர் கதிர்காமருக்கு உதவி செய்வதாகவும் எல்லாவற்றையும் தானே பார்த்துக்கொள்வதாகவும் வாக்களித்துள்ளார்கள்.

சந்நிதி ஆலயத்தில் நித்திய பூசைகள், உற்சவகாலச் செயற்பாடுகள் என்பன இடம்பெறும் சந்தர்ப்பங்களில் எல்லாம் மருதர் கதிர்காமர் பரம்பரையின் வழித்தோன்றலர்களாகவும் ஆரம்பகால வழமைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருபவர்களாக விளங்கும் இந்தப் பூசகர்களுடன் சந்நிதியான் இரண்டறக்கலந்து தேவையான நேரங்களில் தேவையான வழிகளில் அவர்களுக்கூடாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றான். இவற்றை உறுதிப்படுத்தும் ஏராளம் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன. கடந்தவருட உற்சவகாலத்தின் பொழுது இடம்பெற்ற இது தொடர்பான சம்பவம் ஒன்றை இங்கே அடியார்களுக்காக வெளிப்படுத்துகின்றோம்.

| |
|---|
| **ஈழத்துச் சிவாலயங்கள் நூல்வெளியீடு**<br><br>02.07.2006 மாலை 5.00மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் திரு சி. தியாகராசா S.T.R தலைமையில் வெளியிடப்படும்.<br><br>ஈழத்தின் 80இற்கு மேற்பட்ட சிவாலயங்களின் வரலாறும், தகவல்களும், ஆராய்ச்சித்திறனும், எழுத்தாளுமையும் கொண்ட ஆய்வாளர்களினால் ஆக்கப்பட்டு, வித்துவான் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களால் தொகுக்கப்பட்டு 350 பக்கங்கள் வரையில் கோயில் படங்களுடன் வெளியிடப்படும். நூல்விலை ரூபா 350. யாழ்ப்பாணத்தில் 819/1 ஆஸ்பத்திரி வீதி, R.V.கந்தசாமி J.P. அவர்களிடம் நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.<br><br>**T.P.** 021- 222 5401 |
| **மும்மை நலம் முழுவதும் அடைய**<br><br>இறைவனை எப்போதும் வழிபட வேண்டும். ஆனால் புண்ணிய தினங்களில் வழிபட்டால், ஜபம் செய்தால் ஒன்றுக்கு கோடி மடங்கு மிகுதியான உயர்ந்த பலன் விளையும், சோமவாரம், சிவராத்திரி, தைப்பூசம், பங்குனி உத்தரம், கந்தசஷ்டி, கைகுண்ட ஏகாதசி, சூரிய சந்திர கிரஹண காலங்கள், திருவாதிரை முதலிய புண்ணிய நாட்களில் அன்புடன் வழிபாடு புரிபவர்கள், பாவங்களில் இருந்து நீங்கி, புண்ணியம் பெற்று இகம், பரம், வீடு முதலிய மும்மை நலன்களையும் எளிதில் அடைவர். |
| **கடவுள் காப்பாற்றுவார்**<br><br>'அரசன் ஒழிக' என்று சொல்லும் கைதிகளையும் அரசன் உணவு தந்து காப்பாற்றுகிறான். அதுபோலவே 'கடவுள் இல்லை' என்று நாத்திகம் பேசுபவனையும் கடவுள் காப்பாற்றுகிறார். |